www.padippakam.com

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.


# தொழிலாளர் பாதை

DM 1,50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 387 ★ 1988 செப்டம்பர் 02 வெள்ளிக்கிழமை





தடை செய்யப்பட்ட சஞ்சிகை, 1988 ஜனவரி–மார்ச் இதழ்

# "போர்த் இன்டர்நஷனல்" சஞ்சிகையை விடுவிப்பதை அரசாங்கம் தடை செய்துள்ளது!

*புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அரசியல் குழுவின் அறிக்கை*
*1988 ஆகஸ்ட் 19*

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கு அனுப்பியுள்ள அனைத்துலக குழுவின் உத்தியோக பூர்வமான தத்துவ ...த சஞ்சிகையான 'போர்த் இன்டா நஷனல்'' (நான்காம் அகலம்) 1988 ஜனவரி - மார்ச் ...தழை சுங்க இலாகாவிலிருந்து விடுவிப்பதை தடை செய்யுமாறு யூ. என்.பி. அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சரினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இத் தடை உத்தரவானது; இலங்கைத் தொழிலாள வர்க்க இயக்கம், அனைத்துலக தொழிலாள வர்க்க இயக்கம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் என்பவற்றின் முக்கிய அடிப்படை சனநாயக உரிமைக்கு யூ.என்.பி. அரசாங்கம் தொடுத்துள்ள மிலேச்ச தாக்குதலொன்றாகும். உடனடியாக அச் சஞ்சிகையை விடுவிககுமாறு நிர்ப்பந்தித்து யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதலை தோற்கடிக்கவும், அடிப்படை சனநாயக உரிமையை பேணவும், முன்வருமாறு தொழிற்சங்க அமைப்புகள் உள்ளடங்கலான தொழிலாள வர்க்க அமைப்புகளிடம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகிறது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கு கிடைத்துள்ள "போர்த் இன்டர் நஷனல்" சஞ்சிகையை சுங்க இலாகாவிலிருந்து விடுவிக்குமாறு கோரிய போது அதனை சோதனையின் பொருட்டு இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பியுள்ளதாக அதிகாரிகள் அறிவித்தனர். இராஜாங்க அமைச்சில் விசாரித்த போது இராஜாங்க அமைச்சர் அச் சஞ்சிகையை விடுவிப்பதை தடை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதாக நிரந்தர செயலாளர் எமது பிரதிநிதியிடம் அறிவித்தார். இறுதியில் அச் சஞ்சிகை தொடர்கள் "சர்ச்சைக்குரியது" ஆகையால் விடுவிக்க முடியாதுள்ளது என்று தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முன்னொருபோதுமில்லாதளவிலான, விந்தையான அற்ப காரணம் ...ட்டலின் உண்மை அர்த்தம் யாதெனில், தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படுவோரினதும் எந்தவொரு வெளியீடுகளையோ, அறிக்கைகளையோ தடைசெய்து அடக்கிவிடும் சர்வாதிகார உரிமையை பெறும் பொருட்டு, யூ.என்.பி. அரசாங்கம் உள்ளடங்கலான முதலாளித்துவ வர்க்கம் செயற்படுகி

★ 2ம் பககம் பார்க்கவும்

# தோட்டத் தொழிலாளரைக் காப்பாற்று!

## சோசலிச வேலைத் திட்டத்திற்காக போராடு!

*புரட்சிக கம்யூனிஸ்ட் கழக அரசியல் குழுவின அறிக்கை*
*1988 யூலை 22*

**முதலாளித்துவ யூ.என்.பி. அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிரான பிரசாரத்திற்கும் போராட்டத்திற்கும் முன்வரும் தோட்டத் தொழிலாளர்களே! ஏகாதிபத்திய-முதலாளித்துவ சுரண்டல், அடக்குமுறையின் நுகத்தடியினை நிரந்தரமாக தூக்கி வீசும் பொருட்டு சோஷலிசப் புரட்சிக்கான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணி திரண்டு போராடுங்கள்!**

நூற்றாண்டு காலங்களாக பிரித்தானிய காலனித்துவ கொள்ளைக்காரர்களதும் அவர்களது வழித் தோன்றல்களான இலங்கை முதலாளித்துவ கொள்ளைக்காரரதும் ஆட்சியில் கொடிய சுரண்டலுக்கு ஆளான தோட்டத் தொழிலாளரில் இலட்சக் கணக்கானோரை 1964 சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் அநியாயமாக நாடு கடத்தி தென்னிந்திய வீதிகளில் அலையவைக்க இலங்கை-இந்திய ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்தனர். தமது வர்க்க சகோதரர்களை பலி கொண்ட அதே துன்பகரமான தலைவிதிக்கு தம்மையும் பலியிட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் நாடுகடத்த ...ட்டளையிடப்பட்டுள்ள தொழிலாளர்கள் சோஷலிச புரட்சியின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணி திரண்டு போராடுவதை தவிர வேறு மார்க்கமே கிடையாது.

இக் கொடிய தாக்குதலுக்கெதிராக தோட்ட தொழிலாளருடன் வர்க்க தோழமையினடிப்படையில் இணைந்து போராடுமாறு இலங்கையின் சகல தொழிலாளரையும் அவர்களது சகல வர்க்க அமைப்புகளையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. இக் கொடிய தாக்குதலை தோற்கடிப்பது, இலங்கையின் தொழிலாள வர்க்கத்திற்கு தன் சுய எதிர்கால தலைவிதியை நிர்ணயித்து கொள்ளல் தொடர்பான ஜீவ மரண போராட்டமொன்றாகும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இரண்டு இலட்சம் வரையிலான தோட்டத் தொழிலாளரின் தெழிரல்களை பிடுங்கி அவர்களை தென்னிந்தியாவுக்கு நாடு கடத்தும் ஆணை விதிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொழிலாளர்கள் தனியார் துறையின், தொழில் அழிவின் அதிக சுரண்டலின் மிரட்டலை எதிர் கொண்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர் மீது விதிக்கப்பட்ட அரச வேட்டையினால் தற்போது அவர்களது வர்க்க தோழர் 160 பேர் விளக்கமறியல் சிறையில் வாடுகின்றனர்; கடந்த ஜனவரி 31ம் திகதி அடையாள வேலை நிறுத்தம் மூலம் மீண்டும் ஒருமுறை முன் சமர்ப்பிக்கபட்ட சம்பளக்கோரிக்கை யூ. என்.பீ. அரசாங்கத்தினால் குப்பைக் கூடைக்குள் தள்ளப்பட்டுள்ளது. தோட்ட தொழிலாளரது உரிமைகளுக்கு இங்ஙனம் கொடிய தாக்குதல் வழங்குவதற்காக, யூ:என் பி. அரசாங்கமும் ஏனைய முதலாளித்துவ சட்சிகளும் தமிழ் விரோத இனவாதத்தை கிளப்பும் முயற்சியில் மீண்டும் ஈடுபட்டுள்ளன:

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இருநாட்டு ஆளும் வர்க்கமும் இணைந்து வெளியிட்ட ஆணையை ஏற்க தாம் தயாரில்லை என தோட்டத் தொழிலாளர் அவர்களுடைய போராட்டம், பிரசாரங்களுடாக சவாலிட்டு வெளிப்படுத்தியுள்ளனர். தமது வர்க்க அமைப்புகளினால் போராட்டத்திலிறக்கப்பட்ட சகல வேளையும் இறுதிவரை போராடும் மன உறுதியையும் நடைமுறை தேவையும் அவசியமும் அபிவிருத்தியுற்றுவிட்டதை மதட்டத் தெளிவாக விளக்கியுள்ளனர்: இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கருங்காலித்தனமான ஆணையை புறக்கணித்த இரண்டு லட்சம் வரையிலான தொழிலாளர் ஜனவரி 31ம் திகதி கூட்டப்பட்ட அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு பற்ற குதித்தன .

தோட்டத் தொழிலாளரது இத் தயாரிப்பை இழுத்தடிக்கவும், அந்நியப் படுத்தவும் காட்டிக் கொடுக்கவும் உள்ளூர செயற்படும் விலங்குகளாக சமசமாஜ-கம்யூனிச-இ.தொ.கா தலைமைகள் முழு மூச்சாக செயற்பட்டனர். தொழிலாளரது போராட்டம் எழுந்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தம், இந்திய படை ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் யூ.என்.பி. அரசாங்கத்திற்கு எதிராகவும் இராணுவ–பொலிஸ் அடக்குமுறைக் கெதிராகவும் போராடுவது வரை இழுபடும் வர்க்க போராட்டமாக பரிணமமாவதை நன்கறிந்த இத்தலைமைகள் அதனை தடுத்துவிட வேண்டுமென்றே தலையிட்டுள்ளனர்.

★ 3ம் பக்கம் பார்க்கவும்

## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!

படிப்பகம்

www.padippakam.com





# நான்காம் அகிலத்தின் 50வது ஆண்டு நிறைவு!
# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 20வது ஆண்டு நிறைவு!

## 1988 அக்டோபர் 16 மாலை 6 மணி முதல்
## புதிய நகர மண்டபம், கொழும்பு.

- கண்காட்சி
- கூட்டம்
- திரைப்படம்: 'சார் டூ லெனின்'

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**
(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளை)
**இளம் சோஷலிஸ்டுகள்**



# ''போர்த் இன்டர்நஷனல்'' சஞ்சிகையை . . .

— முன் பக்கத் தொடர்ச்சி —

றது என்பதேயாகும். இத் தாக்குதலை குறித்து, எந்த தொழிலாள, ஒடுக்கப்பட்ட அமைப்பும் வாளாவிருக்க முடியாது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1968ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைக் கிளையாக நிறுவப்பட்டு தொடர்ந்து புரட்சிகர அனைத்துலகவாத செயற் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டப் போராடிவரும் அமைப்பொன்றாகும். அனைத்துலக தொழிலாளர் வர்க்க இயக்கத்துடன் தொடர்பு கொள்ள, கொடுக்கல் வாங்கல் செய்ய அவற்றின் சஞ்சிகையைபெற புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கு உள்ள உரிமையானது. இலங்கையில், தொழிலாள வர்க்க போராட்டத்தினால் நிலைநாட்டப்பட்ட உரிமையொன்றாகும். அது மட்டுமல்ல, ''போர்த் இன்டர்நஷனல்'' சஞ்சிகையானது நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் அனைத்துலகவாத சஞ்சிகையுமாகும். யூ.என்.பி. அரசாங்கமானது இச் சகல உரிமைகளுக்கும் தாக்குதலளிக்க முன் வந்துள்ளது. இத் தாக்குதலுக்கு எதிராக தொழிலாள வர்க்கம் உடனடியாக செயற்படாவிடின், சகல அமைப்புகளினதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கும் சுதந்திரமாக தாக்குதலை தொடுக்க யூ.என்.பி. அரசாங்கமும், முதலாளித்துவ அரசும் முன் பாய்ந்து வருவது நின்னம்.

''போர்த் இன்டர் நஷனல்'' சஞ்சிகையை விடுவிப்பதை தடை விதித்தமை எந்த வகையிலும் தற்செயலாக நிகழ்ந்த சம்பவமொன்றல்ல: அது யூ. என். பி. அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சிகர தயாரிப்புக்கிணங்க, கம்யூனிச எதிர்ப்புவாதியும், தமிழின விரோத இனவாதியுமாக பேர்பெற்ற இராஜாங்க அமைச்சரினால் வேண்டுமென்றே எடுக்கப்பட்ட தீர்மானமொன்றாகும்,

விடுவிக்கப்படுவது தடை செய்யப் பெற்ற 'போர்த் இன்டர் நஷனல்' சஞ்சிகை இதழ் குறித்து ஆளும் யூ.என்.பி. அரசாங்கத்தின் பீதி பன்மடங்காக அதிகரித்துள்ளது தற்செயலானதல்ல. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முக்கிய தலைவராயும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராயும் விளங்குகையில் மறைந்த தோழர் கீர்த்தி பாலசூரியாவின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட இந்த இதழில் அடங்கும் முக்கிய கட்டுரைகள் பின்வருவன.

- தோழர் கீர்த்தி பாலசூரியாவின் மறைவினை குறித்து உலக ட்ரொட்ஸ்கிச இயக்கம் வெளியிட்ட அறிக்கைகள், இறுதிக் கிரிகை கூட்டத்தில் நிகழ்த்திய உரைகள்.
- ''சிறிலங்காவின் நிலைமையும்; புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்''
- ''உலக பொருளாதார நெருக்கடியும் சோஷலிசத்திற்கான போராட்டமும்'' பற்றிய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள்.
- யாழ்ப்பாணத்தில் மக்கட் கொலைகளும், தமிழீழத்திற்கு எதிரான காந்தியின் மிலேச்ச யுத்தமும்,
- ஹீலியும், ரெட்கிரேவும் பொங்கோவிக்;
- ''நிக்கரகுவா புரட்சி ஆபத்தில்''
- ''நம்பியுண்டா வீழ்க! அமெரிக்க ஏகாதிபத்தியமே ஹயிட்டியில் கைவையாதே!
- ஹெராலட் ரொபின்ஸக்கு கௌரவ அறிவித்தல்'' நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் முன்நோக்கு பற்றிய அரசியல் அறிக்கை.
- சோவியத் யூனியனில் ஸ்டாலினிச நெருக்கடி பற்றிய அறிக்கை''

அனைத்துலக குழுவின் அறிக்கைகளும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அறிக்கைகளுமான இம் முகிய கட்டுரைகள் பலவும், ஏகாதிபத்தயத்தின் பக்கபலத்தைப் பெற்றுள்ள இலங்கை, இந்திய முதலாளித்துவ அரசாங்கங்களிரண்டினதும் எதிர்ப் புரட்சி செயற் திட்டத்தை உலகத் தொழிலாள வர்க்கத்தின் கண்ணெதிரே அம்பலமாக்கிக் காட்டுகின்றன. இலங்கையில் தமிழினத்திற்கு எதிரான இனவாத தாக்குதல், இந்தியப் படையின் கொடூரே ஆக்கிரமிப்பு என்பவற்றை புட்டுக் காட்டுகின்றன: தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கான முன்னோக்கும் அடங்கியுள்ளன. இலங்கையிலும், தமிழீழத்திலும் தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் தமிழ் தேசிய இனத்தையும், வறிய விவசாயிகளையும் அணி திரட்டி ஏகாதிபத்திய பிடியினை தகர்க்க இந்திய படையின் ஆக்கிரமிப்பை தோற்கடிக்க முதலாளித்துவ வர்க்க ஆட்சியினை தூக்கியெறிந்து சோசலிச புரட்சியை நோக்கி முன் செல்லும் செயற் திட்டத்தை சஞ்சிகை நிச்சயமாக புலப்படுத்துகின்றது;

உலகத் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தை கட்டியெழுப்பும் இச் செயற்திட்டம், இலங்கைத் தொழிலாள வர்க்கத்திற்கு கிடைப்பதை தடை செய்து, அதனை இராணுவ சப்பாத்துக்குள் நசுக்கி, சர்வாதிகாரத்திற்கு உட்படுத்தும் அவசியத் தேவை யூ.என்,பி. அரசாங்கத்தின் தாக்குதலில் கருக்கொண்டுள்ளது. இத்தகைய வங்குரோத்துற்ற, நெருக்கடியினால் முற்றாக நாறிப்போயுள்ள இலங்கையின் சிங்கள இனவாத ஆளும் வர்க்கமானது தொழிலாள வர்க்கம், தொழிலாள வர்க்க அனைத்துலக செயற் திட்டத்தினால் ஆயுதபாணியாகி தமக்கு தாக்குதலிக்க கூடும் என்ற பீதியில் மூழ்கியுள்ளது;

11 வருடகால ஆட்சிக்குள் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான இனவாத யுத்தத்தாலும், இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் படையை இந்திய இராணுவத்தை வரவழைத்தாலும் சிங்கள முதலாளி வர்க்கத்தின் நெருக்கடி தீர்க்கப்படவில்லை. மேலும் உக்கிரமாகியுள்ளது. தொழிலாள வர்க்கம், ஏகாதிபத்திய வங்கியினூடாக தூண்டப்படும் தாக்குதலுக்கும், நெருக்கடி பளுவை தம்மீது சுமத்தப்படுவதற்கும் எதிராக புதிய கோணத்தில் போராட்டங்கள் எழ ஆரம்பித்துள்ளது. கிராமப்புற விவசாயிகளின் எதிர்ப்பும் வெடித்துள்ளது.

இந் நிலைமைகளுள் எதிர்ப் புரட்சிகர தாக்குதல்களை தீவிரமாக்கும் அரசாங்கம் 1979–1987 வரை இராணுவம், பொலிசாரால் நடத்தப்பட்ட கொலைக்கெதிராக சட்ட ரீதியில் செயற்பட முடியாத, கொலை செய்யும் அதிகாரத்தை அரசாங்க படைகளுக்கு வழங்கும் ''தண்டனை விலக்களிப்புச் சட்டம்'' சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஊர்காவல் படையினரை ஆயுதபாணியாக்கும் சாட்டில் யூ.என்.பி. கூலிக் கொலைப் படையினரை வலுப்படுத்த புதிதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யூ. என். பி. அரசாங்கம் இந்திய–இலங்கை ஒப்பந்தமூடாக மீண்டும் 'சனநாயக செயற் திட்டங்களுக்கு' திரும்பியுள்ளதாக சமசமாஜ–ஸ்டாலினிச கம்யூனிச–நவ சமசமாஜ கட்சிகளின் துரோக தலைமைகள் தொழிலாள வர்க்கத்தன் கண்களில் மண் தூவ முன்வந்துள்ளது, மேற்கூறிய சர்வாதிகார நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையிலேயாகும். தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர இலக்கியத்தை தடைசெய்து சனநாயக உரிமைகளை பிடுங்கிக் கொள்ளும் சக்தியை இப் பக்க பலத்தின் உதவியினாலேயே கிட்டியுள்ளது, அது தொழிலாள வர்க்கத்தின் சகல மார்க்சிய இலக்கியங்களை தடை செய்தல் உள்ளடங்கலான அடிப்படை சனநாயக உரிமைகளுக் கெதிராக பாய்ச்சல் செய்ய ஆளும் வர்க்கத்திற்கு கிடைத்துள்ள பக்கபலம் ஒன்றாக விளங்குகிறது.

யூ. என். பி. அரசாங்கம் தொழிலாள வர்க்கத்திற்கு தொடுத்துள்ள தாக்குதல்களின் ஒரு பாகமாக மீண்டும் மீண்டும் புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தின் மீது தாக்குதல்களை தொடுத்துள்ளது. அவையாவன 1986 யூன் மாதம் கிளாபத்தில் பகிரங்க கூட்டம் நடத்த தயாராகும் போது பு.க. கழக இன்றைய செயலாளரான விஜே டயஸ், மத்திய குழு உறுப்பினர் புருட்டன் பெரேரா ரூமன் பெரேரா போன்ற தோழர்களை கைது செய்தமையும், 1987 நவம்பரில் பு.க.க. மத்திய குழு உறுப்பினர் டி. என். நிசான், அங்கத்தவர்களான கே. ஏ. சரச்சந்திரசிறி, நிதானந்த ஜயசேகர போன்ற தோழர்கள் மூவரை கொழும்பில் யூ.என்.பி. குண்டர்கள் கொலை செய்ய முயற்சித்தமையும் விளங்குகின்றன. இத் தாக்குதல்களுக்கு எதிராக விசேடமாக விஜே டயஸ், புருட்டன் பெரேரா, ரூமன் பெரேரா தோழர்களை விடுதலைசெய்ய இலங்கையிலும், அனைத்துலக தொழிலாள வர்க்க இயக்கத்திலும் பிரமாண்டமான பிரசாரத்த அனைத்துலகை குழுவின் தலைவர்கள் தொடுத்திருந்தனர்.

1985ல் பிரித்தானிய தொழிலாளர் புரட்சி கட்சியின் ஹீலி பண்டா, ஸிலோட்டர் துரோகிகளுடன் பிளவுண்டதன் பின் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தேசியவாத சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக தொழிலாள வர்க்க அனைத்துலகவாத செயற் திட்டத்தின் கீழ் தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டும் போராட்டத்தை தீவிரமாக முன் எடுத்துச் செல்கின்றது. இதற்கு எதிராக ஆளும் வர்க்கம் காட்டும் வெறுப்பினை ''போர்த் இன டர் நஷனல்'' சஞ்சிகையை தடை செய்யும் யூ.என்.பி. தாக்குதல்கள் வெளிக்காட்டுகின்றன.

உலக தொழிலாள வர்க்கத்தின் விடுதலையை சுட்டிக் காட்டவல்ல இந்த ஒரே ஒரு விஞ்ஞான பூர்வ செயற் திட்டத்திற்கு இலங்கையில் தொழிலாள வர்க்கத்துள் அபிவிருத்தியுறும் அனுகூலத்தை பத்திய வங்கி ஊழியர் சங்கம் 1988 தேர்த்தலில் நவ சமசமாஜ–ஸ்டாலினிச முன்னணியை தோற்கடித்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரை அதிகாரத்தில் நிறுவியதானது யூ.என்.பியின் வெறுப்பினை தூண்டிவிட்டுள்ளது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை சனநாயக உரிமைகளுக்கு யூ.என்.பீ. அரசாங்கம் தாக்குதல் தொடுத்துள்ள இவ்வேளையில் அவ்வுரிமைகளைப் பேண உடனடியாக செயற்பட இணையுமாறு பு.க. கழக அரசியல் குழு இலங்கை, அனைத்து தொழிலாள வர்க்கத்தினை கோருகிறது.

உடனடியாக இந்த தடை விதிக்கப்பட்ட ''போர்த் இன்டர் நஷனல்'' விடுவிக்குமாறு தொழிற் சங்கங்கள், ஏனைய தொழிலாள வர்க்க அமைப்புகள் ஒடுக்கப்பட்ட அமைப்புகளினுள் தீர்மானங்களை நிறைவேற்றி இராஜாங்க அமைச்சர் டிசான்ஸ் வேர்க்ஸ் கட்டிடம் கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புமாறும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இதற்காக தொடுத்துள்ள ஏனைய பிரசார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்குமாறும் பு.க.க. அரசியல் குழு வேண்டுகிறது.

**பிழை திருத்தம்**

3ம் 4ம் 5ம் 6ம் 7ம் 8ம் பக்கத்தில் உள்ள திகதியை, செப்டம்பர்02, என திருத்தி வாசிக்கவும்.

படிப்பகம்

www.padippakam.com



# தோட்டத் தொழிலாளரை பேணு

[ முன் பக்கத் தொடர்ச்சி ]

தோட்டத் தொழிலாளர் எதிர்கொண்டுள்ள கொடிய இனவாத தாக்குதலானது முழுத் தொழிலாள வர்க்கத்திற்கு மெதிராக தொடுக்கப்பட்டுள்ள தாக்குதலின் ஓர் பிரிவே யாகும். இலங்கையில் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை பேணுமுகமாக ஏகாதிபத்திய வாதிகளது ஆலோசனைப்படி 1987 யூலை 29ம் திகதி கைச்சாத்திட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தமிழ் தாயகத்தின் விடுதலைப் போராட்டத்தை இரத்தக் களரிக்குள் மூழ்கடிக்க இந்திய படைகளது ஆதரவை பெற்றுள்ள யூ என். பீ. அரசாங்கம், அதே சமயத்தில் ஏனைய தோட்ட தொழிலாளரை இலட்சக் கணக்கில் நாடு கடத்தவும் முழுத் தொழிலாள வர்க்கத்திற்கும், வறிய வர்களுக்கும் எதிராக அரச படைகளை கட்டவிழ்க்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. முதலாளித்துவ வர்க்க எதிர்ச் செதிராக பொதுப் போராட்டத்தை தொடுப்பதில் முன் நிற்பதாலேயே பாட்டாளி வர்க்கத்திற்கு எதிர்த்தாக்குதலை வழங்க முடியும்.

## தொழிலாள வர்க்க நிலைமையின் பின்னணி

தொழிலாளவர்க்கம் எதிர்கொண்டுள்ள கொடிய நிலைமையின் பின்னணியாயுள்ளது, ஆழமடைந்துள்ள உலக முதலாளித்துவ நெருக்கடியின் பாகமாக இலங்கையின் முதலாளித்துவ அமைப்பு பெரும் உக்கிர நெருக்கடிக்கு கீழ்ப்பட்டுள்ளமை ஆகும். இலங்கையின் முதலாளித்துவ பொருளாதாரம் பிரதானமாக உலக வர்த்தக சந்தைக்கு உற்பத்தி செய்யும் தேயிலை, இறப்பர், தென்னை தோட்ட பொருளாதார மொன்றாகும். உலக முதலாளித்துவ நெருக்கடியானது, இலங்கையின் முதலாளித்துவ அமைப்பின் மீதும் தோட்டப் புறத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாகும்.

இத்தகைய நெருக்கடியின் மத்தியில் உலக ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இலங்கை, இந்தியா போன்ற அரைக் காலனித்துவ நாடுகளது முதலாளித்துவ ஆட்சியாளரை தொழிலாளர், வறியவர்களுக் கெதிராக முன்னெருபோதுமில்லாதவாறு திரள செய்துள்ளனர். இரண்டாவது உலக யுத்த முடிவில் உலக முதலாளித்துவத்தை பேண அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது தலையீட்டுடன் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் ஆட்சியாளருடன் ஏற்படுத்திய தொடர்பினைபோல அரைக் காலனித்துவ ஆட்சியாளருடன் ஏற்படுத்திய தொடர்புகளும் வேறுபாட்டை வேண்டி நிற்கின்றன. கடன், வர்த்தக சந்தை பங்குகளை பெற செழுமைக்காலத்தில் நடத்திய "திவாரணமளிக்கும்" வேலைத் திட்டங்களை நெருக்கடி உக்கிரமாகும் வேளையில் ஏகாதிபத்திய ஆட்சியாளர் கை விட்டனர். 1988 யூன் மாதத்தில் நிகழ்ந்த முக்கிய 7 ஏகாதிபத்திய நாடுகளின் உச்சி மகா நாட்டில் வறிய நாடுகளைப் பற்றி முதலைக்கண்ணீர் வடித்த அரச தலைவர்கள் எந்த விதத்திலும் தாக்கு பிடிக்க முடியாதுள்ளதாக கணிப்பிடப்பட்ட 17 நாடுகளுக்கு "கடன் வழங்குவது" பற்றி இங்ஙனம் குறிப்பிட்டுள்ளன:

"கடனை மீளளிப்பது ஏற்றுமதிகளின் 30% தத்தினை தாண்டக் கூடாததோடு அந்த நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் வயிற்றை கட்டும் கொள்கைகளை செயற்படுத்தவும் வேண்டும்..."

யுத்தத்தின் பின் உலக முதலாளித்துவத்தை பேண சுமத்தப்பட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இற்றுப்போன தன்மை மிகப் பாரியதாகும். அமெரிக்கா தற்சமயம் உலகின் பெரிய கடனாளி நாடொன்றாக விளங்குகிறது 1940ம் ஆண்டுகளினிறுதியில் நூற்றுக்கு 50% உலக சந்தையின் பிடித்திருந்த அமெரிக்கா இன்று 25% வரை நிலைகுலைந்து போன பங்கையே கொண்டுள்ளது. 1945ல் அமெரிக்காவின் டெற்றொயிட் நகர் உலக வாகன உற்பத்தியில் 80% உற்பத்தி செய்தது. 1965ல் அது நூற்றுக்கு 65% ஆகவும் வீழ்ச்சியுற்று 1980ல் நூற்றுக்கு 20% வரை பொறிந்துள்ளது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உலக முதலாளித்துவத்தை கட்டியெழுப்புவதற்காக மேற்கு ஜேர்மனி, யப்பான் போன்ற தமது போட்டிக்கார முதலாளித்துவ ஆட்சியாளருக்கு பக்கபலமளித்து ஊக்குவித்தனர். இன்று உலக வர்த்தக சந்தையில் இல்லாதொழிந்துவிட்ட தமது ஆதிக்கத்தை மீண்டும் கைப்பற்றி கொள்ளுவதற்காக இந்த போட்டியாளருடன் விசேடமாக யப்பானுடன் பாரிய வெடிப்புகளை ஏற்படுத்தும் வெட்டு குத்துகளுக்கு செல்லும் நிலை அமெரிக்க ஏகாதிபத்திய திற்கு ஏற்பட்டுள்ளது. யுத்த முடிவில் ஏகாதிபத்திய நாடுகளிடையேயான போட்டா போட்டிகளை நிர்வகிக்க பிரெட்டன் வூட் ஒப்பந்தம், சர்வதேச நாணய நிதி, வர்த்தக வரி தொடர்பான பொது இணைப்பு (கேட்) போன்ற நிறுவனங்கள் நிறுவப்பட்டாலும் இன்று அந் நிறுவனங்களை நிர்வகிக்க முடியாதளவிற்கு மோதல்கள் தீவிரப்படும் காலம் ஆரம்பமாகியுள்ளது. உலக ஏகாதிபத்தியத்தின் ஆழமான நெருக்கடி தொழில், சம்பள, வாழ்க்கைத் தர, சமூக சேவை தொழிற்சங்க அரசியல உரிமை அழிவுகளை ஏற்படுத்தும் கொடிய தாக்குதல் தொடர்களை பல்வேறு மட்டத்தில் சகல நாடுகளிலும் கட்டவிழ்த்துள்ளவிதத்தை இன்று பாட்டாளி வர்க்கம் கண்ணாரக் காணுகின்றது.

இலாப வேட்கையில் ஓடும் உலக முதலாளித்துவ அமைப்பானது இங்ஙனம் தன்னுள் கருக்கொண்ட தீர்க்கமுடியாத பரஸ்பர முரண்பாட்டை தீவிரப்படுத்தி மூழ்கடிக்கப்பட்டுள்ளதாக விளங்குகிறது. அதாவது, உற்பத்திக்காக ஒரு நாட்டில் மட்டுமல்ல பல நாடுகளிலும் தொழிலாளரது ஒருங்குபட்ட முயற்சிகள் தேவைப்படுமளவிற்கு உற்பத்தி சமூகமயமாகியுள்ள வேளையிலும் இலாபத்தினடிப்படையிலான முதலாளிகள் சிலரது கைகளில் உற்பத்திக் கருவிகள் தங்கியுள்ளன. விரிவாக்கப்பட்டு கேந்திரப்படுத்தப்பட்டுள்ள உலக பொருளாதாரம் போட்டா போட்டி தேசிய அரசுகளிடம் பங்கு போடப்படுவது பற்றிய பரஸ்பர விரோதம் வளர்ந்துள்ளது. ஏகாதிபத்திய நாடுகளிடையே உக்கிரமாகும். பரஸ்பர விரோதத்தினால் உருவானதும் கோடிக் கணக்கான மக்களை கொன்றதுமான 1914-1918, 1939-1945 காலத்தில் கொடிய உலக யுத்தம் போன்ற அழிவுகார மூன்றாம் உலக யுத்தத்துக்கான மிரட்டல் தீவிரமடைந்துள்ளது.

உற்பத்தி சக்திகளது பாரிய அபிவிருத்தியால் மனிதகுலத்தின் தேவைகள் நிரப்பப் பெறுவதற்கான திறன் பூரணமாயுள்ளதாயினும், முதலாளித்துவத்துள் தொழிலாளரும் ஒடுக்கப்பட்டோரும் அதன் நேரெதிரான நிலைமையையே காணக் கூடியதாயுள்ளது. அமெரிக்காவிலேயே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொகை நூற்றுக்கு 24% வரை உயர்ந்துள்ளது. ஐ.நா. கணிப்பின்படி ஒவ்வொரு நாளும் 40000 சிறார்கள் பட்டினிச் சாவிற்கு உட்படுகின்றனர். காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளின் மக்கட் தொகையில் 50%க்கு மேற்பட்டோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்றனர்.

1948ல் பிரித்தானிய ஆட்சியாளரிடமிருந்து ஆட்சியை தம் கைக்கு பெற்றுக்கொண்ட இலங்கையின் பலவீனமான முதலாளித்துவம் 40 ஆண்டுகளுக்கு பின்னர் நெருக்கடியினால் மூழ்கடிக்கப்பட்டு, தீவிர பலவீனம் கண்டுள்ளது. படுபிற் போக்குடன், தொழிலாளர் ஒடுக்கப்பட்டோர், கிராமப்புற வறிய மக்களை இராணுவ சர்வாதிகாரத்தால் நசுக்கிவிட்டுத் தன்வர்க்க ஆட்சியை பேணி ஈவிரக்கமற்று தலையிட்டுள்ள ஆளும் வர்க்கமாக மாறியுள்ளது. சமசமாஜ கம்யூனிச இ.தொ.கா. துரோக தலைமைகள் 1964லும் 1970–77 லும் முதலாளித்துவ கூட்டரசாங்கங்களுள் நுழைந்து நடத்திய காட்டிக் கொடுப்புகளால் தொழிலாள வர்க்கத்தை குழப்பநிலைக்கு இழுத்து விட்ட பின் ஆட்சியேற்ற யூ.என்.பீ. அரசாங்கம் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக இத் தாக்குதல்களின் புதிய கட்டத்தை ஆரம்பித்தது.

11,430 கோடிகள் வரையில் வெளிநாட்டுக் கடனை அதிகரித்துக் கொண்ட யூ.என். பி. அரசாங்கம் ஏகாதிபத்திய வங்கியாளருக்கு வட்டி, கடன் மீளளிப்புகளாக ஏற்றுமதி வருவாயில் 28%தை வழங்கும் நிலைமையை சிருட்டித்தது. இப் பணத்தின் பெரும்பாகம், ஒட்டுண்ணி சேவைப் பிரிவுகளின் விரிவாக்கத்திற்கு ஈடுபடுத்தியதன் பின், 1980–1985 கால கட்டங்களுள் நூற்றுக்கு 5.5 விகித பொருளாதார விரிவாக்கம் ஏற்படுத்திக் கொண்டதாக கூறும் யூ.என்.பி. அரசாங்கம் 1987ல் அது 1.5% ஆக வீழ்ச்சியுற்றுள்ளதாக அறிவித்தது. ஆசியாவில் அதிக குறைந்த மட்ட சம்பளம் வழங்கும் நாடாக இலங்கையை ஏற்படுத்தியமை; வேலையற்றோர் எண்ணிக்கையை பல்வேறு பாகங்களிலும் நூற்றுக்கு 18—28 வரை உயர்த்தியமை; தோட்டத்துறையிலும் அரச துறையிலும் தனியார் முதலாளித்துவ துறையினை நட்டத்தில் இயங்குவதாக பெயரிட்டு மூடு விழா நடத்தியமை, பல்தேசிய கம்பெனிகள் வர்த்தகம் உற்பத்தி துறை உடைமைகளை கைப்பற்றி சுரண்டலை தீவிரப்படுத்தியமை; பல்தேசிய கம்பனிகள் ஏகாதிபத்திய வங்கி பொருளாதாரத்தில் ஆட்சிக்காக நேரடியாக தலையிடல்; வைத்திய, கல்வி உள்ளடங்கலான சமூக சேவைகளை வெட்டல் என்பன முதலாளித்துவ விவாக்கத்தின் கீழ் தொழிலாள வர்க்க, வறிய மக்கள் முன் அபிவிருத்தி கண்டுள்ள ஆழமடைந்துள்ள நிலைமைகளாகும்.

## முதலாளி வர்க்க அரசியல் வேலைத்திட்டம்

இந் நெருக்கடியினுள் இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் வேலைத் திட்டத்தை உணர்த்தும் வகையில் 'பன்னாட்டுக் கம்பனிகளை தருவித்து நாட்டின் பிரச்சினையை தீர்க்க நாம் தொழிற்படுகின்றோம்' என யூ.என்.பி. யின் தலைவர் ரஞ்சன் விஜேரத்ன கம்பஹாவில் நடைபெற்ற கட்சி அங்கத்தினர் மகா நாட்டில் குறிப்பிட்டார். முதலாளி வர்க்கத்திற்கு உள்ள ஒரே வேலைத் திட்டம், ஏகாதிபத்தியவாதகளின் காலடிகளை வருடியபடி கடன் பிச்சை பெற முயலும் அதே வேளையில், கழுத்தறுப்புப் போட்டியில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்தியவாதிகளின் டன்னாட்டுக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அவற்றின் தரகர்களாக செயற்படுவதே. அதன் பொருட்டு தொழிலாள வர்க்கத்தினையும் ஏழை விவசாயிகளையும், தமிழ் தேசிய இனத்தினையும் நசுக்கி இராணுவ சர்வாதிகாரத்தினை கட்டி எழுப்புதலே முதலாளி வர்க்கத்தின் அரசியல் வேலைத்திட்டமாகும். வட-கிழ் மாகாணங்களிற்கு இந்திய இராணுவத்தை அழைத்து, தமிழ் விடுதலைப் போராட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கத் தொழிற்பட்டு வரும் யூ.என்.பி அரசாங்கம் இராணுவத்தை நாடு பூராவும் பலப்படுத்தி வருகின்றது. நாடு பூராவும் முகாம்கள் அமைத்து இராணுவத்தை குவிப்பதன் மூலமும் பச்சைப் புலிகள், தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் மூலம் குண்டர் படை அணிகளை திரட்டுவதன் மூலமும் இராணுவ சர்வாதிகார இலக்குடன் செயற்பட்டு வருகின்றது.

உலக முதலாளித்துவ நெருக்கடியின் சவுக்கடியினால் தோட்டத்துறை நசிந்து போயுள்ளது.

1985ல் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானம் (நிலையான விலைகளில்) 434 மில்லியன் எஸ்.டீ.ஆர். ஆகும். இது 1986ல் 281 மில்லியன் எஸ்.டீ.ஆர். ஆகவும் 1987ல் 280 மில்லியன் எஸ்.டீ.ஆர். ஆகவும் வீழ்ச்சி கண்டதாக மத்திய வங்கி அறிக்கை குறிப்பிட்டது. ஏகாதிபத்திய ஏகபோக கம்பனிகள் உலக சந்தையின் விலைகளை இயக்கிய வண்ணம் இலாபத்தைச் சூறையாட நடாத்திவரும் வேலைத் திட்டங்களாலும், தேயிலை ஓர் அத்தியாவசியமற்ற பண்டமாக இருப்பதாலும் தேயிலை விலையினதும், வருமானத்தினதும் வீழ்ச்சியை தவிர்க்க முடியாது உள்ளது. இந் நெருக்கடியின் மறுஅம்சம் இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு உலகச் சந்தையில் இருந்து வந்த பங்கு 1985ல் நூற்றுக்கு 17 வீதமாக வீழ்ச்சி காணத் தொடங்கியதே.

தேயிலை விலை வீழ்ச்சி கண்டு உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பதால் தோட்டப் பராமரிப்புக்கள் சீர் கெட்டுப் போயுள்ளன. இவற்றினை யூ. என்.பி. அரசாங்கம் 'இலாபமற்ற'தாகக் குறிப்பிட்டு சில தோட்டங்களை மூடியும் உள்ளது. இதனால் முழுமையாகப் பார்க்கும் இடத்து தேயிலை உற்பத்தி வீழ்ச்சி காணும் போக்கு ஆரம்பித்துள்ளது. தோட்டங்களை மூடும் யூ.என் பி. அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினால் உற்பத்தி நிலத்தின் அளவு (1985) 23,1000 ஹெக்டேயரில் இருந்து (1986) 22,3000 ஹெக்டேயராகவும் 1987ல் 22,1000 ஹெக்டேயராகவும் வீழ்ச்சி கண்டுள்ளது.

1984ல் 1 கிலோகிராம் தேயிலை உற்பத்தி செலவுகளு

★ 4ம் பக்கம் பார்க்கவும்

படிப்பகம்

www.padippakam.com



# தோட்டத் தொழி[ல்…]
# சோஷலிச வேலைத்தி[ட்…]

மேலாக கிடைத்த லாபம் ரூபா 12.45 ஆகும்: ஆனால் 1985ல் இது 35 சதமாக வீழ்ச்சி கண்டதோடு 1986ல் உற்பத்திச் செலவு ரூபா 35/– ஆகியது. கிலோவுக்கு கிடைத்த விலையோ ரூபா 30.38:

3 ஆண்டுகளுக்கு முன்னர் உலக வங்கி தோட்டத் தொழிலாளர்களை உலக நெருக்கடியின் விளைவுகளுக்கு பலியாக்கும் பொருட்டு பின்வரும் வேலைத் திட்டத்தை முன் வைத்தது:

● தோட்டங்களை நிர்வகிக்கும் முக்கிய இரண்டு சபைகளான ஜனவசம், அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களை கலைத்தல்—இதன் கீழ் முதல் நடவடிக்கையாக தோட்டங்களில் நிறைவேற்று அதிகாரத்தை தோட்ட அதிகாரிகளுக்கு (சூப்பிரென்டன்களுக்கு வழங்கி, பின்னர் படிப்படியாக வெளிநாட்டு, உள்ளூர் முதலாளித்துவ கம்பனிகளுக்கு அவற்றை விற்பனை செய்தல்.

● 'இலாபமற்றது' என அரசாங்கத்தினால் வகுக்கப்படும் தோட்டங்களை மூடுதலும் தனியார் முதலாளிகளுக்கு கையளித்தலும், ஏற்கனவே ஆரம்பமாகி உள்ள இத்தாக்குதலின் கீழ் அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுள்ள இலங்கை தோட்டக் கம்பனி 'இலாபமற்ற' தோட்டங்களை தம் வசம் பொறுப்பேற்றுக் கொண்டு அவற்றை மூடுதல் அல்லது தனியார் துறைக்கு கையளித்தல்.

● 'மறுசீரமைக்கப்பட்ட' தோட்டங்களின் செலவுகளுக்கு மேலாக நூற்றுக்கு 20% வருமான இலக்குடன் அத்தோட்டங்களை நடாத்துதல்—உலக வங்கி இந்த மறுசீரமைப்பின் ஒரு இலக்காக வெளிநாட்டு கடன்களை செலுத்தும் பொருட்டு எதிர் காலத்தில் அவசியமான வெளிநாட்டுச் செலாவணியை உழைத்தல்.

இலங்கை முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளைப் போலவே அதன் முக்கிய துறையான தேயிலை தோட்டத் துறையில் உக்கிரம் கண்டுள்ள நெருக்கடியை யூ.என்.பி. அரசாங்கத்தினாலோ அல்லது வேறு முதலாளித்துவ அரசாங்கங்களாலோ தீர்க்க முடியாது. உலக வங்கியின் வேலைத் திட்டமானது, முன்னெப்போதும் இல்லாத விதத்தில் அடிமைச் சுரண்டலுக்கு தொழிலாளர் வர்க்கத்தை உள்ளாக்கி கசக்கிப் பிழிவதன் மூலம் நெருக்கடியை தீர்க்கும் வேலைத்திட்டமாகும்.

1988 ஜூனில் பாரிசில் கூடிய 'இலங்கைக்கு உதவி வழங்கும் குழுவின்' கூட்டத்தில் இந்தப் பிற்போக்கு வேலைத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஏகாதிபத்திய பிரதிநிதிகள் யூ.என்.பி. அரசாங்கத்துக்கு கட்டளையிட்டனர்.

உலக சந்தையில் விலையும், இலங்கைக்குரியபங்கும் வீழ்ச்சி காணுகையில் உற்பத்திச் செலவு அதிகரிக்கின்றது. இந்நிலையில் நூற்றுக்கு 20%மாக வருமான இலக்கை அடைவது என்பது, முதலாளித்துவ ஆட்சியின் கீழ் இலட்சக் கணக்கில் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தலையும், சம்பள வெட்டுகளையும், சகிக்க முடியாத மட்டத்துக்கு வேலையை துரிதப்படுத்துவதையும் குறிக்கின்றது. உலக வங்கி தோட்டத் துறையை ஏற்கனவே தனது 'கண்காணிப்பின்' கீழ் கொண்டு வந்துள்ளதோடு உத்தேச வேலைத் திட்டத்தினை அமுல் செய்யும் பிற்போக்கு நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளது.

## இந்திய– இலங்கை ஒப்பந்தம்

குடியுரிமை பறிக்கப்பட்ட 2 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தல் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் ஒரு சரத்தாகும். ஜயவர்தன–காந்தி கைச்சாத்திட்ட ஒப்பந்தம் ஒன்றுடன் ஒன்று இணைந்த எதிர்ப்புரட்சி இலக்குகள் இரண்டைக் கொண்டுள்ளது. முக்கிய இலக்கு, தமிழ் விடுதலைப் போராட்டத்தை தோற்கடித்தல், இரண்டாவது, இலங்கை தொழிலாள வர்க்கத்தினதும்' ஏழை விவசாயிகளதும் போராட்டத்தை தோற்கடிக்கும் பொருட்டு யூ.என்.பி அரசாங்கம் உள்ளடங்கலான சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினை பலப்படுத்துதல். 1948ல் ஏகாதிபத்தியவாதிகளுடனான சதியின் மூலம் திணிக்கப்பட்ட முதலாளித்துவ ஐக்கிய அரசினை காக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட பிற்போக்கு இந்திய–இலங்கை உடன்படிக்கை இந்த விதத்திலேயே செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை முதலாளித்துவ நெருக்கடியின் பலிகடாக்களாக்கி, அவர்களின் தொழில்களை இனவாத அடிப்படையில் நாசமாக்கி தென் இந்திய வீதிகளில் அலைய வைக்க இந்திய – இலங்கை உடன்படிக்கையின் மூலம் இரு நாட்டினதும் ஆட்சியாளர்கள் மீண்டும் ஒன்று பட்டுள்ளனர். யூ.என்.பி. – சி.ல.சு.க. முதலாளிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தினை தூண்டுதல், அரசியல் கைதிகளை கைது செய்தல் உள்ளடங்கலான அரச வேட்டைகளை உக்கிரமாக்கியுள்ளனர். இந்த அழிவுகளை திணிக்கும் பொருட்டு தொழிலாளர்களின் இயக்க சக்தியை சிதறடிக்கும் பிற்போக்கு அவசியத்தின் அடிப்படையிலேயே இவற்றைச் செய்கின்றனர்

தியத்தலாவையில் இது வரை இருந்து வந்த இராணுவ முகாமுக்கு மேலதிகமாக தோட்டத்துறையை சுற்றி வளைக்கும் பொருட்டு நுவரேலிய, இரத்தினபுரி, தலவாக்கலையில் நிரந்தரமான இராணுவ முகாம்களை யூ.என்,பி. அரசாங்கம் அமைத்துள்ளது. சி.ல.சு.க. முதலாளிகளின் இனவாத பிரச்சாரத்தின் பக்க பலத்துடன் யூ.என்.பி. அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களையும் நிலமற்ற ஏழை சிங்கள விவசாயிகளையும் மோத வைக்கும் விதத்தில் தோட்டத் துறையின் மத்தியில் சிங்கள குடியேற்றங்களை அமைக்கும் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. இது சிங்கள முதலாளிக பிரித்தானிய ஏகாதிபத்திய எஜமான்களின் அங்கீகாரத்துடன் 1930பதுகளின் கடைப்பகுதியில் இருந்து கிழக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றங்களை நிறுவி இன்றைய தமிழர் விரோத படுகொலை யுத்தம் வரை விஸ்தரித்த ஆத்திரமூட்டும் வேலைத் திட்டத்தினை தோட்டத்துறையினுள்ளும் எடுத்துச் செல்லும் பிற்போக்கு இயக்கமாகும். இவை அனைத்துடனும் தொடர்பு பட்ட விதத்தில் யூ.என்.பி. – சி.ல.சு.க. முதலாளிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக குண்டர்களை அணி திரட்டுகின்றார்கள் யூ.என்.பி. ஜூன்டாவான ஜாதிக சேவ சங்கத்தின் அதிகாரிகள், அநேக தோட்ட அதிகாரிகள் ஆகியோர் இந்த ஆத்திர மூட்டும் குண்டர் இயக்கத்தின் பாகமாவர்,

தமிழ் தேசிய இனத்தின் மீது ஏகாதிபத்தியவாதிகளதும் இந்திய–இலங்கை முதலாளிகளதும், ஆணையிய இராணுவ பலத்தினால் திணிக்க இடம் பெறும் தாக்குதல் இலங்கையினுள்ளும் தொழிலாள வர்க்கத்தை சிதறடித்து இராணுவ ஆட்சியை திணிக்க நடைபெறும் வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாகும். யூ.என்.பி அரசாங்கம் இலங்கையினுள் இராணுவத்தை கட்டவிழ்ப்பதை தமிழ்த் தேசிய இனத்துக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் எதிரான இனவாத ஆத்திரமூட்டலை தூண்டிவிடுவதுடன் தொடங்கியது.

## தலைமைகளின் எதிர்ப்புரட்சி பாத்திரம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் யூ.என்.பி. –உலக வங்கி சர்வாதிகாரத்தை சிதறடிக்கும் பொருட்டு தொழிலாளர் வர்க்கத்தை அணி திரட்டுவதற்கு எதிராக அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சி திட்டங்களின் கையாட்களாகியுள்ளனர் இந்திய–இலங்கை உடன்படிக்கைக்கு இவர்கள் வழங்கும் ஆதரவு, இத்துரோகத்தினை புதிய கட்டத்துக்கு உயர்த்தி உள்ளது. தமிழர் தாயகத்தில் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு இவர்கள் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவளிக்கின்றார்கள்; இதன் மூலம் அதனுடன் இணைந்து இலங்கை தொழிலாள வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கும் எதிராக யூ.என்.பி. அரசாங்கம் உள்ளடங்கலான பிற்போக்கினை பலப்படுத்துகின்றனர். இத் தலைவர்களின் முழு அங்கீகாரத்துடன் பேணப்பட்டு வரும் இந்திய–இலங்கை உடன்படிக்கையானது இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து, நாடு கடத்த செயற்படுகின்றது. ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினை நசுக்க முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் இணையும் எந்தவொரு தலைமையையும் தாம் பிரதிநித்துவம் செய்து கொள்வதாகக் கூறிக் கொள்ளும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை எதிர்ப்பதோடு, முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடனும் அரசுடனும் அடிமுதல் தலைவரை பிணைத்து வைக்கின்றனர். சமசமாஜ – கம்யூனிஸ்ட் – இ.தொ.கா. தலைவர்களின் வர்க்க சமரச அரசியலின் இந்த இயக்கவியல் வரலாற்று ரீதியல நிரூபிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையின் அணிதிரண்ட தொழிலாள வர்க்கத்தின் பெரும் தொழிற் சங்கமான தோட்டத் தொழிலாளர்களைக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவா எஸ். தொண்டமான் எதிர்ப்புரட்சி திட்டங்களை தயார் செய்யும் யூ.என்.பி அரசாங்கத்தின் அமைச்சர்

(3ம் பக்…

அவையின் உறுப்பினர் ஆவ… தோட்டத் தொழிலாள…ளுக்கு எதிரான தாக்குத…ளின் முக்கிய ஏஜன்ட… தொழிற்படுபவரும் அவரே.

இந்த எதிர்ப்புரட்சி த…வர், முதலாளித்துவ ஐக்…அரசினை தொழிலாளர், ஒ…கப்படும் மக்களிடமிரு… காப்பதற்கு முழுமனே சப… பூண்டுள்ளார். ஏகாதிபத்…யத்தினையும் இந்திய–இலங்… முதலாளித்துவ ஆளுமைய…யும், முதலாளித்துவ அமை…பின் உயிர் வாழ்வினை… வெளிப்படையாக அங்கீகா…துக் கொண்டுள்ள தொண்…மான் உள்ளடங்கலான … தொ,கா. தலைவர்கள் தொ…லாளர்கள், ஏழைகள், தம…



ஜெ ஆர். –…

தேசிய இனத்தினர் தமது தலை…விதியை முதலாளித்துவ… அமைப்பினுள் தீர்த்து… கொள்ள வேண்டும் என்பதை… அங்கீகரித்த முதலாளித்துவ… ஏஜன்ட் கும்பலை சேர்ந்தவ…ராவர். அவர்கள் கம்யூனிச…த்தையும் சோசலிசத்தையு… அப்பட்டமாக எதிர்க்கின்ற…னர்.

முதலாளித்துவ அமைப…பின் நெருக்கடி பெருமளவி… உக்கிரமடைந்து தொழிலாள… ஒடுக்கப்படும் மக்களின் கடுப்… போராட்டங்கள் வெடித்துள…ளன. இந் நிலைமையில் முத…லாளித்துவத்தின் எதிர்ப்புர…ட்சி ஏஜன்டாக தமது சுயரூ…பத்தை தொண்டமான் தலை…மை காட்டிக் கொள்ள நேரிட்…டுள்ளது. 1987 மார்ச்சில… (தமிழ் நாட்டில்) மதுரை நக…ரில் அவர் தமது பிற்போக்கு… நிலைப்பாட்டை இங்ஙனம் முன… வைத்தார்: ''தனக்கு எதிராக… ஆயுதம் தூக்கும் எந்தவொரு… மக்கள் குழுவினையும் ஒழித்துக்… கட்ட அந் நாட்டிற்கு உரிமை… உண்டு''

1963 சிறிமா–சாஸ்திரி ஒப்…பந்தம் மூலம் தோட்டத்…

படிப்பகம்

www.padippakam.com



# ...ரியை தகர்த்தெறி!....

**(தொடர்ச்சி)**

...மைக்குள்ளாக்கியது. உலக ...லாளித்துவத்தின் கூட்டு. ...மத்துவ வளர்ச்சினால் திர் ...பம் செய்யப்பட்டுள்ள ...ங்கையின் முதலாளித்துவப் ...ருளாதாரத்தின் ஸ்தம்பி ...தையும், பின்னடிப்பையும், ...வையும் நிறுத்துவதற்கு ...ங்கையின் முதலாளி வர்க் ...தின் எந்தவொரு பகுதியின ...தும் வல்லமை கிடையாது'

இலங்கை முதலாளித்துவ ...மைப்பில் 'தேசிய புனருத் ...ரணம்' ஏற்படுத்துவது சம் ...நமாக சமசமாக-கம்யூனிச ...சமசமாஜ தலைவர்கள் முன் ...க்கும் கருத்துக்கள் இந்நிலை



...தின ஊர்வலம் — 1988

...மையில் வரலாற்று எதிர்ப்பு ...க்கவை. உலக முதலாளித் ...துவத்தினுள் இலங்கை முதலா ...ளித்துவம் வகிக்கும் ஸ்தானத் ...தினாலும், அந்த உலக முதலா ...ளித்துவத்தின் வரலாற்று ...ரண்பாடுகளினாலும் நிர்ண ...ம் செய்யப்பட்டுள்ள இலங் ...கையின் முதலாளித்துவத்தின் ...நருக்கடியைத் தீர்க்கும் ...தேசிய பாதைகள்' இல்லை. ...வாகளின் இந்த 'தேசிய ...பாதை' யானது தொழிலாள ...வர்க்கத்தை 'தேசிய முதலாளி ...வர்க்கத்துக்கு' அடிமைப் ...படுத்தி அதன் மூலம் ஏகாதி ...பத்தியத்தினதும் தேசிய முத ...லாளி வர்க்கத்தினதும் எதிர்ப் ...புரட்சி வேலைத் திட்டத்துக்கு ...யிடும் வேலைத் திட்டமாக ...ங்குகின்றது.

இன்றைய கடன் வெட்டுக் ...கள், ஏற்றுமதி பொருட்களுக் ...களுக்கான சந்தைகளின் ...வீழ்ச்சி, விலை விழ்சசி, உற்பத் ...திச் செலவு அதிகரிப்பு ஆதியன

ஒரு புறமும் ஏகாதிபத்திய வங்கிகளுக்கும் பன்னாட்டு கம்பனிகளுக்கும் மூர்க்கமான சுரண்டல நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டும், கடன்களை திருப்பிச் செலுத்தும் பொருட்டும் செய்யும் நெருக்குவாரங்கள் மறுபுறத்திலுமாக இலங்கையின் ஆளும் வர்க்கம் உக்கிரமடையும் உலக நெருக்கடியுள் மூழ்கிப் போயுள்ளது.

தமது பொருளாதார, அரசியல் வங்குரோத்தினை அடைக்கும் பொருட்டு இலங்கை முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து திரும்பத் திரும்ப அதிகரித்து வந்த கடன் வாங்கல்கள், யூ. என்.பி. அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் 550 கோடி ரூபாய்களில் இருந்து 1987 ஜனவரியில் 7009 கோடி ரூபாய்களாக - 15 மடங்கால் அதிகரித்துள்ளது. நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் நூற்றுக்கு 28 வீதம் இந்த வெளிநாட்டுக் கடன்களின் பேரிலான வட்டியைச் செலுத்தும் பொருட்டு ஒதுக்க நேரிட்டுள்ளது. உத்தியோக பூர்வமான பணவீக்கம் நூற்றுக்கு 13.8 வீதம். வாழ்க்கைச் செலவுப் புள்ளி யூ. என். பி. ஆட்சிக் காலத்தில் மட்டும் 203ல் இருந்து 714 புள்ளியாக அதிகரித்துள்ளது. நாட்டில் தொழில் புரியக் கூடிய சனத் தொகையில் நூற்றுக்கு 25 வீதமானோர் வேலையின்மையில் மூழ்கிப் போயுள்ளனர். ரூபா 300க்கு குறைந்த மாதச் சம்பளம் பெறும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள் முழு ஜனத் தொகையில் நூற்றுக்கு 60% எனக் கணக்கடப்பட்டுள்ளது. படிப்பறிவின்மை நூற்றுக்கு 13% வரை உயர்ந்துள்ளது. போஷாக்கின்மையும், தொற்று நோய்களும் பயங்கரமான கட்டத்தை அடைந்துள்ளன

இந்த அழிவுகளிற்கு மத்தியில் இவற்றை மேலும் மேலும் உக்கிரமாக்கும் தாக்குதல்களை சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் தொடுத்துள்ளது ரூபாவை மதிப்பிறக்கம் செய்யவும், அரசாங்க, கூட்டுத்தாபன துறைகளை தனியார்மயப்படுத்தவும் மக்களின் நுகர்வினை குறைக்கவும், கல்வி, சுகாதாரம், சேமநல சேவைகளை ஒழிக்கவும் கட்டளையிட்டுள்ளது. இந்த வேலைத் திட்டங்களின் மூலம் தொழிலாள வர்க்கத்தினதும் ஏழைகளதும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களதும் தொழில்களுக்கும் வாழ்க்கைதரத்துக்கும், ஜனநாயக உரிமைகளுக்கும் தாக்குதல் தொடுத்துள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இந்திய இராணுவ பலத்தினால் ஒடுக்கும் அதே வேளையில் யூ.என்.பி. அரசாங்கம் மேற் சொன்ன வேலைத்திட்டத்தை அமுல் செய்யும் பொருட்டு தொழிலாள வர்க்கத்துக்கும் கிராமப்புற ஏழை மக்களுக்கும் எதிராக பொலிஸ் இராணுவ தாக்குதல் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகளதும் 'தேசிய' முதலாளி வர்க்கத்தினதும் நலன்களை காக்கும் பொருட்டு பொலிஸ். இராணுவ சர்வாதிகாரத்தைத் திணிப்பதைவிட வேறு 'மாற்று வழி' யூ.என்.பி சிறீலங்கா சுதந்திரக் கட்சி முதலாளிகளுக்கு இல்லை.

சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ தலைவர்கள் 'சர்வாதிகார' 'யுத்த ஆட்சி' பற்றி குற்றஞ் சாட்டுகிறார்கள். இவர்கள் மற்றுமோர் முதலாளித்துவ மக்கள் முன்னணி அரசாங்கத்தினை ஆட்சிக்கு கொணர்வதன் மூலம் இவற்றை தவிர்த்து விடலாம் எனக் கூறியபடியே இங்ஙனம் செய்கின்றனர். இவர்கள் முதலாளித்துவத்தினுள் சர்வாதிகாரத்தை நீக்கிவிடுவதற்கான பாதை உள்ளது என்ற கையாலாகாத்தனமான நப்பாசைகளை விதைக்கிறார்கள் 'முதலாளித்துவ சர்வாதிகாரத்தினை, விடச் 'சிறந்தது எனவும்' ஆதலால் முதலாளித்துவ ஜனநாயகத்தைக் காக்க தொழிலாள வர்க்கம் செயற்பட வேண்டும் எனவும் இத் தலைமைகள் கூறிக் கொள்கிறார்கள். 'சர்வாதிகார', யுத்த ஆட்சி' ஊடாக இராணுவ சர்வாதிகாரத்துக்குச் செல்லும் மூலம் முதலாளித்துவ வர்க்க ஆட்சியே.

''முதலாளித்துவ ஜனநாயகத்தை'' தூக்கிப் பிடித்து தொழிலாள வர்க்கத்தினை அதற்குக் கட்டிப்போட முயன்ற கவுட்ஸ்கி உள்ளடங்கலான துரோகிகளுக்கு எதிராக முதலாளித்துவ ஜனநாயகத்துள்' முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் ஆட்சி நிலவுவதாகவும் லெனின் சுட்டிக்காட்டினார்:

''யுத்தத்துக்கு முன்னரும் கூட இந்த 'பரிசுத்த ஜனநாயகம்' முதலாளித்துவத்தின் கீழ் நிசமாக என்னவென்பதை 19ம் 20ம் நூற்றாண்டுகளின் வரலாறு வெளிக் காட்டியுள்ளது. 'பரிசுத்த ஜனநாயகம்' நன்கு வளர்ச்சி கண்டு விளங்கும் நிலையில் வர்க்கப் போராட்டம் நன்கு உறுதியான, நன்கு உக்கிரமான, நன்கு பலமானதாகுவதாகவும் முதலாளித்துவ ஒடுக்கு முறையும், முதலாளித்துவ சர்வாதிகாரமும் 'பரிசுத்தமாக்கப்' படுவதாகவும் மார்க்சிசம் எப்போதும் குறிப்பிட்டுள்ளது. குடியரசு பிரான்சின் டிபஸ் வழக்கும் சுதந்திர ஜனநாயக அமெரிக்க குடியரசினுள் முதலாளிகளால ஆயுதபாணியாக்கப்பட்ட கைக்கூலி குண்டர்களால் வேலை நிறுத்தக்காரர்கள் படுகொலை செய்யப்பட்டமையும் இதற்குச் சமானமான ஆயிரம் விடயங்களும் முதலாளித்துவம் பயனற்ற முறையில் ஒழித்துவிட முயலும் உண்மைகளாகும். அதாவது, மிகவும் ஜனநாயகமயமான குடியரசுள் பயங்கரமும், முதலாளித்துவ சர்வாதிகாரமும நிலவுகின்றதையும் மூலதனத்தின் ஆட்சி இருக்கின்றது என சுரண்டப்படுவோர் நினைக்கும் ஒவ்வொரு தருணத்திலும் அது அப்பட்டமாக காட்சி தருவதையும் காட்டுகின்றது''

(லெனின் நாற்தொகுதி-22-பக்கம்-461)

முன்னேறுத 'முதலாளித்துவ ஜனநாயக' நாடுகளுக்கும் இன்று இது பொருந்தும். தொழிலாள வர்க்கத்தின் பணி, தம்மைச் சுரண்டும் பொருட்டு கொடிய சர்வாதிகாரத்தை நடாத்துவது 'முதலாளித்துவ ஜனநாயக' ஆட்சி வடிவினுள்ளா இல்லையேல் அப்பட்டமான சர்வாதிகார ஆட்சி வடிவினுள்ளா என்பதை தீர்மானம் செய்வது முதலாளி வர்க்கமேயாகும். அதனை தொழிலாள வர்க்கத்தினால் தீர்மானிக்க முடியாது. அதை தீர்மானம் செய்ய தொழிறபடுவோர் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான புரட்சிகர தொழிற்பாட்டையும் வேலைத் திட்டத்தையும் முதலாளி வர்க்கத்துக்கு அடிமைப் படுத்துகின்றார்கள். சமசமாஜ — கம்யூனிச — நவ சமசமாஜ தலைவர்கள் முதலாளித்துவ ஜனநாயகத்துடன் தொழிலாள வர்க்கத்தை கட்டிப்போட கேவலமான முறையில் முயற்சி செய்கையில், இலங்கை முதலாளி வர்க்கம் அப்பட்டமான சர்வாதிகார திசையில் அநேக நடவடிக்கை எடுத்துள்ளது.

இத் தலைவர்கள் முழுமனே அங்கீகரித்துள்ள இந்திய—இலங்கை ஒப்பந்தம் இதில் முக்கியமானது இதன் மூலம் வடக்கு கிழக்கில் ஏற்கனவே சர்வாதிகாரம் தயாராகியுள்ளது. மறுபுறத்தில் யூ என்.பீ அரசாங்கம் இராணுவ, பொலிஸ் படை அணிகளை, ஊர்க்காவல் படைகள், அதிரப் படைகள், போன்ற இராணுவப் படைகளையும், பச்சைப் புலிகள் போன்ற கொலைகார கும்பல்களையும் தொழிலாள வர்க்கத்துக்கும், ஏழை மக்களுக்கும் எதிராகப் பலப் படுத்தியுள்ளது.

தொழிலாளவர்க்க அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்கள், போராளிகள், பத்திரிகைகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் யூ என். பீ. அரசாங்கத்தின் சர்வாதிகார சட்ட, பொலிஸ், இராணுவ குண்டர் தாக்குதல் மிரட்டல் தொடுக்கப்பட்டுள்ளது. தொழிலாள வர்க்க அமைப்புகளுக்கு ''பயங்கரவாத'' முத்திரை குத்தி அடக்கிவிடும் முயற்சிகள் பல முறை யூ என் பீ. அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. 1980 வேலை நிறுத்தத்தினை தோற்கடித்து தொழிற் சங்க அலுவலகங்களை சீலிட்டதோடு தற்போது ''பாதுகாப்பு காரணங்களுக்காக'' தொழிற் சங்கங்களை மூடிவிடுவது என்ற வேட்டை நடத்தப்படுகிறது. வங்கி ஊழியர் தாதியர் பிரசாரத்தில் இத் தொழிற்சங்கங்களை தடை செய்து தலைவர்களை கைது செய்யும் மிரட்டல் தொடுக்கப்பட்டது. தொழிற் சங்க தலைமைகளை அரசாங்க ஏஜந்துகளாக மாற்றிவிட செயறபடும் அதே சமயம் தொழிற் சங்கங்களை அரச அடக்குமுறைக்கு கட்டுப்படுத்தும் பொலிஸ்-இராணுவ ஆட்சிக்கான தயாரிப்பே நிச்சயமான நடவடிக்கையாகும்.

முதலாளித்துவ சர்வாதிகாரத்திற்கு எதிரான தொழிலாள வர்க்கத்திற்குள்ள ஒரே ஒரு மாற்று திட்டம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காக போராடுவதே. அதன் பொருட்டு தொழிலாள வர்க்கத்தின் சுயாதின புரட்சிகர செயற் திட்டத்தின் மீது எழுச்சி காண்பதை தவிர்ந்த வேறெந்த நடைமுறைவழியெதுவும் தொழிலாள வர்க்கத்திற்கு இல்லை.

தற்போதைக்கு முதலாளித்துவ அமைப்பினை கட்டிக் காக்கும் வேலைத்திட்டத்தின் மூலமும் எதிர்காலத்தில் 'நீண்ட' பயணத்தின் மூலம் சோசலிசத்தை நாக்கி செல்லும் வெறும் வாக்குறுதிகளையும் கொண்ட இரண்டு கட்ட ஸ்டாலினிச மக்கள் முன்னணி வேலைத்திட்டம் வரலாற்று எதிர்ப்புரட்சி நடவடிக்கைக்காக திருப்பவும் இலங்கையின்

★ 6ம் பக்கம் பார்க்கவும்

# முதலாளித்துவ மக்கள் முன்னணியை...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ தலைவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. இது முதலாளி வர்க்கத்துக்கு தொழிலாளர் வர்க்கத்தைக் கட்டிப் போட்டு அதனை புரட்சிகரப் பணியில் இருந்து தடுத்து ஸ்தம்பிதம் அடையச் செய்ய முதலாளி வர்க்கத்தின் சார்பில் செய்யும் தலையீடாகும். இத் தலைவர்கள், எதிர்காலத்தில் தொழிலாளர்கள் முதலாளிகளின் சொத்து உரிமையை சவாலுக்குள்ளாக்கும் புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபடும் வேளையில் அவற்றை 'தீவிரவாத' நடவடிக்கைகள் எனத் தாக்கி முதலாளித்துவ சொத்து முறையை காக்கும் பொருட்டு தலையிடலாம். இன்று இனவாத ஒடுக்கு முறையில் இருந்து விடுபடும் பொருட்டு தமிழ் தேசிய இனம் தொடுக்கும் போராட்டத்தை நசுக்கிவிட யூ.என்.பி. அரசாங்கத்துக்கும் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கும் ஒத்துழைப்பு வழங்கி வரும் இவர்கள் நாளைய தினம் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகவும் அங்ஙனமே தலையிடுவர்.

நாம் இதுவரை காலமும் மக்கள் முன்னணி அமைத்து வந்த முதலாளித்துக் கட்சிகளைப் போலன்றி சிறீலங்கா மக்கள் கட்சி என்ற பேரில் புதிய கட்சி கிடைத்துள்ளதாகக் காட்டி தொழிலாள வர்க்கத்தின் கண்களில் மண்ணை வாரி இறைக்க சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ தலைவர்கள் துடிக்கிறார்கள். 'இடது' கோலம் பூண்ட இந்த முதலாளித்துவக் கட்சி, முதலாளித்துவத்தின் முழு அங்கீகாரத்தைப் பெறாது போயினும் இந்திய—இலங்கை உடன்படிக்கைகளுக்கும் ஆக்கிரமிப்புக்கும் ஆதரவு வழங்கியதன் மூலமும், தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை வழங்குவதை எதிர்த்ததன் மூலமும் ஜயவர்தன—காந்தி அரசாங்கங்களுக்கு முக்கியமான சேவையை வழங்கியது. சிறீலங்கா மக்கள் கட்சியானது, சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ மற்றும் கேவலம் தலைமைகளைக் கொண்டு தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தை நாசமாக்கும் பொருட்டு முதலாளி வர்க்கத்தினால் தயார் செய்யப்பட்டு களத்தில் இறக்கப்பட்டுள்ள புதிய முதலாளித்துவக் கட்சியாகும்.

மக்கள் முன்னணியை பலப்படுத்தி, தொழிலாள வர்க்கத்தை அதற்கு அடிமைப்படுத்தும் பொருட்டு இடதுசாரி—வலதுசாரி மத்தியவாதிகள் இருசாரரும் சமசமாஜ—கம்யூனிச தலைவர்களின் துரோக ஆலவட்டங்களாக வெளிப்பட்டுள்ளனர். மக்கள் முன்னணியின் பங்காளர்களான நவ சமசமாஜ மத்தியவாதிகள் அதனை 'ஐக்கிய முன்னணி' என அழைக்கின்றனர். பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சி, சமசமாஜ—கம்யூனிஸ் கட்சிகளின் தலைவர்களைப் போன்ற துரோகிகளை அம்பலப்படுத்தவும், வர்க்க எதிரிக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை வழி நடாத்தவும் ஏற்படுத்தும் 'ஐக்கிய முன்னணி' என்ற உபாய நடவடிக்கையினை நவ சமசமாஜ மத்தியவாதிகள் முதலாளித்துவ கட்சிகள் தொழிலாள வர்க்கத்தின் உள்ளேயுள்ள சந்தர்ப்பவாதிகளுடன் உருவாக்கிக் கொண்டுள்ள கூட்டுடன் சமப்படுத்தும் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நவ சமசமாஜ மத்தியவாதிகள் அவர்களின் 'ஹரய' பத்திரிகையில் பின்வருமாறு எழுதினர்: ''மேற்குறிப்பிட்ட விதத்தில் உடன்படிக்கை சம்பந்தமாக வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள போதிலும் செயல்படும் அவசியத்தின் அடிப்படையில் பெரும்பான்மையினரின் கருத்துக்களைக் கொண்ட அறிக்கைகளுக்கு இணங்குதல் ஐக்கிய முன்னணியின் தொழிற்பாட்டுக்கு அவசியமான ஒருமைப் பாட்டை வழங்குதலாகும். ஐக்கிய முன்னணியில் தொழிற்படுகையில் அத்தகைய தியாகங்களை செய்ய நேரிடும் என்பதை புரிந்து கொள்ளுதல் சிரமம் அல்ல'' (''ஹரய'' மார்ச் 11)

இந்த மத்தியவாதிகளுக்கு தமிழ் தேசிய இனத்தை இந்திய—இலங்கை உடன்படிக்கைக்கும், ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கும் பலி கொடுப்பது ஒரு 'தியாகமாகும்'. அதன் மூலம் தமிழ் தேசிய இனத்தில் இருந்தும் ஏழை விவசாயிகளில் இருந்தும் தொழிலாள வர்க்கத்தை தனிமைப்படுத்தி எதிர்ப் போராளர்களுக்கு பலிகொடுப்பதாவது, நவ சமசமாஜிஸ்டுகள் கட்டிக் காக்க சபதம் பூண்டுள்ள முதலாளித்துவ அமைப்புடன் ஒப்பிடும் போது சிறு ''தியாகமே''.

இந்திய—இலங்கை உடன்படிக்கையையும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்பையும் ஆதரிக்கும் அரசாங்க லிகிதர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கங்களின் தலைவர்கள் மக்கள் முன்னணி தலைவர்களின் பின்புறத்தில் கை வைத்துள்ளனர். 'இடது' முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சியுடன் இணைந்தும், அதன் தலைவர்களுடன் மேடைகளில் ஏறியும் அவர்களை முற்போக்காளர்களாகக் காட்டியும் மக்கள் முன்னணியை பலப்படுத்த கை கொடுத்தனர்.

மக்கள் முன்னணியை தொழிலாளர் வர்க்கத்தினுள் இறக்குகையில் கடந்த சில வருடங்களாக தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்கு ஆதரவளிப்பதாயும், முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக போராடுவதாயும் வாயடித்து வந்த இந்த இடது, வலதுசாரி மத்தியவாத தலைவர்களின் ஆதரவு, துரோகிகளாக அணி திரண்டுள்ள சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுக்கு இன்று அவசியமாகும்.

மக்கள் முன்னணியை உடனடியாக விஸ்தரிக்கும் பொருட்டு வேறும் சில துரோகிகள் கும்பலும் புதிதாக சேர்ந்து கொண்டுள்ளது. காந்தி—ஜயவர்தன உடன்படிக்கையின் எதிரில் அடிபணிந்து அந்த உடன்படிக்கையையும் ஆக்கிரமிப்பையும் அங்கீகரித்த தமிழ் குட்டி முதலாளித்துவ ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் இயக்கங்களின் தலைவர்களே அவர்கள். ''ஐனநாயக தொழிற்பாட்டில் இணைதல்'' 'வடக்கு தெற்கு இடதுசாரி ஐக்கியம்' என்பன போன்ற மோசடியான சுலோகங்கள் பொறிக்கப்பட்டதும், காட்டிக்கொடுக்கப்பட்ட தமிழ் தேசிய இனத்தின் இரத்தக் கறை படிந்த கொடியை உயர்த்திப் பிடித்துள்ளதுமான இத் துரோகிகள் தமிழ் தேசிய இனத்தை மக்கள் முன்னணிக்குள் தள்ளும் ஒப்பந்தத்தை பொறுப் பேற்றுள்ளனர்.

## புரட்சிகர வேலைத் திட்டம்

தமிழினத்தை இந்திய இராணுவ சர்வாதிகாரத்திற்கு கீழ்ப்படுத்தியும், தென் புறத்தில் சர்வாதிகாரத்திற்கு தயாராகும் யூ.என்.பி. அரசாங்கம் உட்பட்ட முதலாளித்துவம் நடத்தும் தயாரிப்பை, அதன் மூலவேறாக நிலவும் நெருக்கடிக்கு இலக்காகியுள்ள முதலாளித்துவ அமைப்பினையும் அவ்வர்க்க ஆட்சியையும் அகற்ற தமிழ் தேசியத்தையும் கிராமப்புற வறிய மக்களினதும் தலைமையாக எழுச்சியுற்று ஆட்சியை கைப்பற்றும் சிறீலங்கா, தமிழ் பாட்டாளி வர்க்கத்தினால் மட்டுமே தோற்கடிக்க முடியும்

தொழில், வாழ்க்கைத் தரம், ஏனைய அடிப்படை சனநாயக உரிமைகளுக்கு தொடுக்கப்படும் தாக்குதலை தகர்க்க ஏகாதிபத்திய, தேசிய முதலாளித்துவ சொத்துடமையை தொழிலாள வர்க்க ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத் திட்டத்திற்காக போராடுவது, அத்தியாவசியமாக விளங்குகிறது. எனினும் இச் சோசலிச வேலைத் திட்டங்களுக்காகப் போராடுவதற்கு சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ தலைமைகள் சிபார்சு செய்யும் மக்கள் முன்னணியில் கட்டுண்ட தொழிலாள வர்க்கத்தால் முடியாது. இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவளிக்கும் வேலைத் திட்டத்தினால் கட்டுண்ட தொழிலாள வர்க்கத்தினால் இதற்கு போராட முடியாது. இந்திய இலங்கை ஆக்கிரமிப்பு படையை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றவும் தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை நிலை நாட்டவும் ஈடுபடும் வேலைத் திட்டத்தில் மீது தொழிலாள வர்க்கம் எழுச்சியுற வேண்டும். அங்ஙனமே தொழிலாள வர்க்கம் கிராமப்புற விவசாய மக்களின் பிரச்சினையை தீர்ப்பது சம்பந்தமான வேலைத்திட்டத்தினூடாக அவர்களது ஆதரவை தம்மால் அணி திரட்டிக் கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்திய பிடியையும் ஏற்றத்தாழ்வு முதலாளித்துவ பிற்போக்கு ஆட்சியையும் முறியடிக்க இந்தியா, சிறீலங்கா தமிழீழம் உள்ளடங்கலான முழு இந்திய உபகண்டத்தின் ஐக்கிய தொழிலாள வர்க்கத்தின் ஒருமித்த போராட்டத் தேவையை இந்திய இலங்கை ஒப்பந்தமும், இந்திய படை ஆக்கிரமிப்பும் மிக தெளிவாக காட்டியுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தையும் இந்திய ஆக்கிரமிப்புக்கும் ஆளும் வர்க்கம் வழங்கும் ஆதரவையும், ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்தினால் இந்த முதலாளித்துவ சர்வாதிகாரத்தை நோக்கி அணி திரள்வதையும் மிக நன்றாக நிலைநாட்ட சிறிலங்காவினதும் தமிழீழத்தினதும் தொழிலாள வர்க்கம் ஒரே ஒரு அனைத்துலக பொது எதிரிக்கெதிராக நடைமுறையில் எதிர்கொள்ள வேண்டும். தம் நாட்டினுள் அனைத்துலக பிற்போக்கின் தேசிய ஏஜண்டு ஆட்சியை புரட்டியடிப்பதற்காக நடத்தும் போராட்டத்தால் சிறிலங்காவினதும் தமிழீழத்தினதும் தொழிலாள வர்க்கம் அனைத்துலக தொழிலாளர்களுடன் பொதுப் போராட்டத்திற்கான வர்க்க தோழமையை கட்டியெழுப்ப வேண்டும்.

சமசமாஜ—கம்யூனிச நவ சமசமாஜ தலைமைகள் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்திற்கு கட்டிப் போடுவதற்காக சமர்ப்பித்துள்ள வேலைத் திட்டங்களுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைக் கிளை சமர்ப்பித்த பாட்டாளி வர்க்க சுயாதீன புரட்சிகர வேலைத் திட்டத்தின் மீது அணி திரளுமாறு தமிழீழத்தினதும் சிறிலங்காவினதும் பாட்டாளி வர்க்கத்தை வேண்டுகிறோம். ஏகாதிபத்திய பிடியை ஒழிக்க:—

- சர்வதேச நாணய நிதி, உலக வங்கி ஏனைய ஏகாதிபத்திய வங்கிகளுடன் ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தமும் செலுத்த வேண்டியுள்ள கடன் வட்டியை மீண்டும் செலுத்துவதை நிராகரித்தல்
- ஏகாதிபத்திய சொத்துக்களை தொழிலாள ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கல்.
- ஐ. நா. மற்றும் ஏகாதிபத்திய நிறுவனங்களிலிருந்து வெளியேறுதல்.
- வெளிநாட்டு ஏற்றுமதி—இறக்குமதி வர்த்தகத்தை அரசுடமையாக்கல்.

தமிழ் தேசிய பிரச்சனையை தீர்க்கவும் ஏனைய சனநாயக உரிமைகளை நிறைவேற்ற:—

- தமிழ் தேசியத்தின் சுயநிர்ணய உரிமையான தமிழீழத்திற்கான உரிமையை நிலைநாட்டல்.
- கல தோட்ட தொழிலாளருக்கும் குடியுரிமை வழங்கலும் அவர்களை அடக்க விதிக்கப்பட்ட சகல ஒப்பந்தங்களையும் அகற்றல்.
- பல்வேறுபட்ட மதக் குழுக்களுக்கும் சமவுரிமை அரசின் மத சமத்துவம்.

★ 7ம் பக்கம் பார்க்க

**Subscribe to Tholilalar Pathai**

*Have it posted.*
*20 issues: DM 26,-*

*Write to:*
*Neue Arbeiterpresse*
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West Germany*

**Ecrire à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

*Subscription payable to account no. 211 85-431, Postgiroamt Essen (effected at any post office)*

***Fund***

***In order to reprint and circulate Tholilalar Pathai regularly in Germany we need your financal support. Please send donations to Postgirokonto "Neue Arbeiterpresse", B. Rippert, Nr. 211 85-431 Postgiroamt Essen. Note " Tamil Paper"***

***All incoming money in excess of the printing costs will be used to support the RCL in Sri Lanka.***

www.padippakam.com





# முதலாளித்துவ மக்கள் முன்னணியை...

## (6ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு, கல்வி, சம்பந்தமாக மதசார்பற்ற முறையில் விவசாயிகள் பிரச்சினையை தீர்க்க

- பயிரிடும் விவசாயிக்கு காணியுரிமையை நிலைநாட்டல்.
- விவசாயிகள் திருப்பி வழங்க வேண்டிய கடன் வட்டியை வெட்டி விடல்: பரந்த அரச கடன் முறையை ஏற்படுத்தல்.
- உற்பத்திக்கு தேவையானதும் உற்பத்தியை சுயமாக பெறவும் விற்கவும், கிராமப்புற விவசாயிகளை ஆட்டிப் படைக்குக் முதலாளித்துவ கம்பெனிகளையும் வியாபாரிகளையும் அகற்றல். தொழிலாளரதும் விவசாயிகளதும் கூட்டுறவு முறையை நிலைநாட்டல்.
- நீர் வரி, ஏனைய வரிகளை அகற்றுதல்,
- சட்ட நிறைவேற்று சபை கூட்டல்.

இந்த சனநாயக செயற்றிட்டத்தை செயற்படுத்த தொழிலாள வர்க்கத்திற்கு தமிழினத்தினதும் விவசாயிகளதும் ஆதரவை தம்பால் வென்றெடுத்து சோவியத் சபைகளினை அடிப்படையாக கொண்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கட்டியெழுப்புவதாலேயே முடியும். அங்ஙனமே அத்தகைய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு சனநாயக செயற்றிட்டத்தை செயற்படுத்துவதோடு இடைநிறுத்தம் செய்ய முடியாது.

உலக முதலாளித்துவ நெருக்கடியால் உக்கிரமாகும் தாக்குதல்களை தோற்கடிக்க தொழிலாள வர்க்கம், தனியார் துறையிலும் சகல அடிப்படை கைத்தொழில் தோட்ட வங்கி, ஏனைய வியாபாரங்கள் தமது ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்தை செயற்படுத்த முன் செய்யவேண்டும்.

இச் சோசலிச பொறுப்பை நிறைவேற்ற விவசாய மக்களை ஆட்டிப்படைக்கும் முதலாளித்துவ வியாபாரிகளது பலத்தை தகர்ப்பதும், தமிழ் தேசியத்தின் விடுதலை போராட்டத்திற்கெதிரான இந்திய-இலங்கை முதலாளித்துவங்களினதும் அவற்றுடன் சதி செய்யும் வலதுசாரி, இடதுசாரி தமிழ் முதலாளிகளது பலத்தை தகர்ப்பதும் மிக இன்றியமையாதது:

பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை கட்டி எழுப்ப வேண்டுமாயின் தொழிலாள வர்க்கம் தமிழ் தேசியத்தையும் வறிய விவசாயிகளையும் தம்மை சூழ ஒருங்கிணைத்தபடி முதலாளித்துவ அமைப்பினை பேணும் அடக்குமுறை இயந்திரமான முதலாளித்துவ அரசினை தகர்ப்பதற்காக சுயபலக்கோட்டையை நிறுவிய வண்ணம் போராட வேண்டும்: யூ.என்.பீ. அரசாங்கமானது கடந்த பத்தாண்டுகளுள் தொழிலாள வர்க்கத்திற்கும், தமிழ் தேசியத்திற்கும் ஒடுக்கப்பட்ட விவசாயிகளுக்கும் எதிராக அரச இயந்திரத்தை வலுப்படுத்தியுள்ளது மட்டுமல்ம அரை-இராணுவ படைகளையும் "பச்சைப் புலி" எனும் பெயருடைய மரணப்படை கும்பலையும் கட்டியெழுப்பியுள்ளது. அங்ஙனமே சி.ல.சு.சு முதலாளிகளின் பின்னால் திரண்டுள்ள ம.வி.மு.யின் சுய குண்டர் படை தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்களது புரட்சிகர போராட்டங்களுக் கெதிராக கட்டவிழ்த்து விடப்படம் முதலாளித்துவ எதிர்ப் புரட்சியின் படையாக செயற்படுத்தப்படும் போக்கில் செல்கிறது.

இத்தகைய எதிர்ப் புரட்சிகர ஆயுதபாணி படைச்சக்திகளுக்கு எதிராக அரசியல் கட்சி, தொழிற் சங்கம் உள்ளடங்கலான தொழிலாள வர்க்க அமைப்புகளை பேண தொழிலாளரின் பாதுகாப்பு குழு சகல வேலைத்தலங்களிலும் கட்டியெழுப்பப் பட வேண்டும்

தொழிற்சங்க அமைப்பை பேண தொழிலாள பாதுகாப்புப் படைக்காக பகிரங்கமாக பிரசாரம் செய்து முன்னணியில் நிற்க சகல தொழிலாள வர்க்க அமைப்புகளும் முன் நிற்க வேண்டும். இதற்கு தேவையான பணச் செலவினை தமது அங்கத்தவர்களிடையே பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த எதிர்ப் புரட்கிகர சக்திகளை எதிர் கொண்டு தமது போராட்டத்தை முன்னெடுத்து செல்ல

- ★ நகர்ப்புற தொழிலாளியின் சோவியற் சபையையும் கிராமப்புற தொழிலாள-ஒடுக்கப்பட்ட விவசாயிகளது சோவியற் சபையையும்,
- ★ இச் சோவியற் சபைகளுக்கு கீழான ஒழுங்குபடுத்தப்பட்ட ஆயுதபாணி படையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியம்,

இந்த ஆயுதபாணி படையினருடாக அரச இயந்திரத்தினதும் ஏனைய பிற்போக்கு தாக்குதல்களுக்கும் எதிர் தாக்குதல் வழங்கி அவற்றை சிதறடிப்பதற்கான பிரசாரமும் செய்யவும் செயல் ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இங்ஙனம் கட்டியெழுப்பபட்ட தமிழீழத்தின் தொழிலாளரதும், வறிய விவசாயிகளது சோவியற் சபைகளது மகா நாட்டையும் சிறீலங்கா தொழிலாளரதும் வறிய விவசாயிகளது சோவியற் சபைகளது மகாநாட்டையும் சுயேட்சையாக இணைக்கும் தமிழீழ – சிறிலங்கா ஐக்கிய சோசலிச குடியரசு ஒன்றுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்:

தொழிலாள வர்க்கம் சனநாயக சோசலிச புரட்சியின் செயற்றிட்டத்தை செயற்படுத்துவதான இப் போராட்டத்தில் யூ என்.பீ: அரசாங்கம் உள்ளடங்கலான முதலாளித்துவத்தின் தாக்குதலுக்கெதிராக அணி திரண்டு தயாராக வேண்டும்.

- ★ இந்திய-இலங்கை ஆக்கிரமிப்பு படையை வடக்கு-கிழக்கு பகுதிகளிலிருந்தும் அகற்று! தமிழ் விடுதலை போராளிகள் மேல் கைவையாதே! தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுய நிர்ணய உரிமையை வழங்கு! ஆறுவது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தை அகற்று.
- ★ தோட்டத் தொழிலாளரது குடியுரிமையை வழங்கு! 1948 குடியுரிமைச் சட்டம் 1964சிறிமா–சாஸ் ஒப்பந்தம், 1987 இந்திய-இலங்கை உட்பட சகல அடக்கு முறை சட்டங்களை அகற்று!
- ★ உயர்ந்து செல்லும் வாழ்க்கை செலவினத்திற்கேற்ப உயர்ந்த சம்பளம்.
- ★ தொழில்களிலிருந்தும் நீக்குதல். தனியார் மயமாக்கலுக்கு எதிராக தொழிற்சாலைகளில் உள்ளமர்ந்து கொள்!
- ★ முதலாளித்துவ வியாபாரங்களின் கணக்கேடுகளை தொழிற் சங்கங்கள் பார்வைக்காக திறந்து வை!
- ★ தொழிற் சங்கங்களில் கை வையாதே!
- ★ விலக்கப்பட்ட வேலை நிறுத்தகாரரை தொழியிலமர்த்து!
- ★ சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!
- ★ மக்கள் விடுதலை முன்னணிக்கும் தமிழ் விடுதலை அமைப்புகளுக்கும் விதிக்கப்பட்ட தடையை அகற்று!
- ★ சுகாதார கல்வி சேவை வெட்டுகளை நிறுத்து!
- ★ விவசாய கடன்களை திருப்பி செலுத்துவதை நிராகரி! நீர் வரியை அகற்று! கொள்ளையடித்த காணிகளை மீண்டும் விவசாயிகளுக்கு வழங்கு!
- ★ தொழிலற்ற வர்களுக்கு வாழ்க்கை செலவுபடி வழங்கு!

என்ற தொழிலாளவர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் பாரிய கோரிக்கைகளை சூழ்ந்து மறியல் போராட்டம் வேலைத் தலங்களில் உள்ளமர்ந்து கொள்ள ஒழுங்கு செய்தல் என்பதற்காக யூ.என்.பீ. அரசாங்கத்தை விரட்டியடிக்கும் பொதுவேலை நிறுத்தத்தை தயார் செய்ய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மகாநாட்டை கூட்ட தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டும் போராட்டம் அவசியமான நடவடிக்கையாகும். இப்போராட்டத்தில் தொழிலற்ற இளைஞரை அணி திரட்டி தொழிற்சங்க அமைப்புகளுக்கு சார்பானதாக அமைக்கவேண்டும். இதற்கான போராட்டத்திற்காக சகல தொழிலாள வர்க்க அமைப்புகளையும் ஒழுங்கு கூட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யூ.என்.பீ. அரசாங்கத்தை விரட்டியடிக்க தொழிலாள வர்க்க போராட்டத்தை தயாராக்கவும், தமிழ் தேசிய இனத்தையும் விவசாய மக்களையும் தொழிலாள வர்க்க தலைமைக்கு கீழ் ஒன்று படுத்தவும் முக்கிய தடையாக சமசமாஜ – கம்யூனிச கட்சிகள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு இந்திய ஆக்கிரமிப்பிற்கும், யூ.என்.பீ. அரசாங்கத்திற்கும் வழங்கும் ஆதரவையும் சிறீலங்கா மக்கள்கட்சியுடன் நடந்தும் கூட்டு விளங்குகிறது. முதலாளித்துவமுடன் டத்தும் இப் பிற்போக்கு தொடர்புகளுக்கும் முதலாளித்துவ தேவைகளுக்கு சார்பாக தொழிலாள வர்க்க வேலைத்திட்டத்தை வெட்டி தொழிலாள வர்க்கத்தை ஸ்தம்பிக்கவும் அதன் போராட்டத்திறகு விலங்கு போடவும் இத்தலைமைகள் செயற்படுகின்றன.

சமசமாஜ–கம்யூனிச– நவசமசமாஜ தலைமைகளது துரோக மக்கள் முன்னணிக்கு சார்பாகவும் மறுபுறம் இலங்கை தொழிலாள–விவசாயிகளின் தலைமை யூ என்,பீ. அரசாங்கத்திற்கு வழங்கியுள்ள எதிர்ப் புரட்சிகர பக்கமாகவும் விளங்குகிறது: இத் தலைமைகள் தோட்டத் தொழிலாளரது போராட்டத்தை நேரடியாக காட்டிக் கொடுத்துவிட ஆதரவளிப்பது மட்டுமல்ல; அரசாங்கத்திற்கும் தொழிற் சங்க போராட்டங்களை உடைக்கவும், போராளி தொழிலாளரை, இளைஞரை பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கவும் முதலாளித்துவ வர்க்கத்தின் சார்பில் பொலிஸ்காரராக விளங்குகின்றனர்.

தொழிலாள வர்க்கத்தின் சார்பில் பேசுவதாக கூறும் ந.ச.ச.க.–கம்யூ–இ:தொ.க தலைமைகளுக்கு முதலாளித்துவ அரசாங்கம் – கட்சிகளுடன் சகல தொடர்பையும் அதற்கான பக்க பலமும் வழங்குவதையும் நிறுத்துமாறும் யூ. என் பீ. அரசாங்கத்தை விரட்டியடிக்கப் போராட்டத்தை தயார் செய்யுமாறும் தொழிலாள விவசாய அரசாங்கத்திற்காக போராடுமாறும் தொழிலாள வர்க்கத்னத நிர்ப்பந்திக்க வேண்டும்.

இப்பொறுப்பிலிருந்து நழுவும் சகல தலைமைகளையும் விரட்டி தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தலைமையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பது தீர்க்கமானதாகும்.

சமசமாஜ–கம்யூனிச– இ: தொ. கா. தலைமைகளது துரோகத்தைபோல இடதுசாரி, வலதுசாரி மத்தியவாத தலைமைகளது துரோகத்தையும் தமிழ் குட்டி முதலாளித்துவ தலைமைகளது பலவீனத்தையும் முன்கூட்டியறிந்த தொழிலாள வர்க்க தலைமைத்துவ நெருக்கடியை திர்க்க உரமளித்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கை கிளையான புரட்சி கம்யூனிஸ்ட் கழகமாகும். இதனால் இந்திய இலங்கை முதலாளிகள் சதியொன்றூடாக முதலாளித்துவ ஆட்சியை பேண முன் வரும்போது அதற்கெதிராக தமிழ் தேசிய இனத்திற்கும் வறிய விவசாயிகளுக்கும் வழிகாட்ட முயலும் ஒரே ஒரு அமைப்பாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விளங்குகிறது.

இந்திய இலங்கை முதலாளது சதியை முன் கூட்டியே உணர்ந்து தமிழ் முதலாளிகளதும் குட்டி முதலாளித்துவ தலைமைகளதும் பலவீனத்தை உணர்த்தி ல.ச.ச. க–கம்யூனிச இ. தொ. கா. ஏனைய துரோக தலைமைகளது முதலாளித்துவ பாணி அரசியலின் விளைவினை அம்பலமாக்கி, யூ. என், பி. அரசாங்கம் உள்ளடங்கலான முதலாளித்துவத்திற்கெதிராக போராடும் வேலைத் திட்டத்தை தொழிலாள வர்க்கத்திடம் சமர்ப்பித்தது புரட்சி கம்யூனிஸ்ட் கழகமே: உபகண்டத்தின் தொழிலாள் வர்க்க போராட்டத்தின் அனைத்துலகவாத இணைப்பை கட்டியெழுப்ப போராடி இந்தியாவின் சோஷலிச லேபர் லீக்கை புரட்சிகர தலைமைத்துவமாக நிலைநாட்டுமாறு புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் தோழமையுடன் வேண்டுகிறது. அங்ஙனமே இப்போராட்டத்தை உலக பாட்டாளி வர்க்கம் உலக சோஷலிசத்திற்காக நடத்தும் போராட்டத்திலிருந்தும் பிரித்துவிட முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது நன்கு நிரூபித்துள்ளது. உலக சோஷலிச புரட்சியின் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவை கட்டியெழுப்பும் பொறுப்பிற்கு பு. க. கழகம் அதன் ஏனைய கிளைகளுடன் உறுதியாக உரமளித்து நிற்கிறது. இலங்கையிலும், தமிழீழத்திலும் தொழிலாள வர்க்கம் சோஷலிச புரட்சியின் ஒரம்சமாகும். அது தொழிலாள வர்க்கத்தை கீழ்ப்படுத்தும் உலக ஏகாதிபத்தியத்தினை துடைத்து கட்டுவதற்கான போராட்டத்துடன் இணைந்துள்ளது.

மக்கள் முன்னணியின் வலைக்குள் அதனூடாக சுமத்தப்படும் இநதய-இலங்கை முதலாளித்துவத்தினை தோற்கடிக்கும் புரடசிகர முன்நோக்கு செயற்றிட்டம், அமைப்பு என்பவற்றை சமர்ப்பித்துள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்

★ 8ம் பககம் பார்க்கவும்

படிப்பகம்

www.padippakam.com



18

தலவாக்கலை

# பாமஸ்டன் தோட்ட தொழிலாளர்களுக்கு எதிரான சதியை தோற்கடி!

தலவாக்கலை பாமர்ஸ் டன் தோட்டத்தின் தொழிலாளர்கள் மத்தியில் மதவேறுபாடுகளை உண்டுபடுத்தி அவர்களை கத்தோழிக்க, ஹிந்து மத அடிப்படையில் மோத சதி செய்த ஸ்டிவன் பீரிஸ் என்னும் நபர் தொழிலாளரின் போராட்டத்தினால் தோட்ட சேவையில் இருந்து அகற்றப்பட்டதாக அத்தோட்ட தொழிலாளர்கள் ''தொழிலாளர் பாதை''க்கு அறிவித்தனர், அத்தோடு தோட்ட இ. தோ: கா. கிளையிலிருந்து 160 தோட்ட தொழிலாளர்கள் விலகி ஸ்டாலினிச சி பி: டப்ளியு.யூ. சங்கத்தில் இணைந்ததாக அறிய வருகிறது.

'தொழிலாளர் பாதை'யும் புரட்சி கம்யூனிஸ்ட் கழகமும், தொழிலாளர் மத்தியில் இன, மத வேறுபாடுகளை உண்டுபடுத்தும் நாசகாரி சக்திகள் சம்பந்தமாக விழிப்புடன் இருக்கும்படி அபாய அறிவிப்பு விடுக்கின்றது.

கடந்த சில கிழமைகளுக்கு முன் கத்தோலிக்க தொழிலாளர்களின் பூஜை தினத்தன்று மற்றைய தொழிலாளர்கள் பறித்த தேயிலை இலைகளை நிறுத்து எடுக்க நிர்வாகம் மறுத்ததன் மூலம், நடைமுறைபடுத்திய இவ்வாத்திரம் ஊட்டும் சம்பவம் தோட்டத் தொழிலாளர் மத்தியில் மத சார்பான வேறுப்பை உண்டு படுத்தி அவர்களை பிரித்து வைத்து ஆளும் திட்டமேயாகும். இச் சம்பவத்திற்கு எதிரான வேலை நிறுத்தம் நடந்த பொழுது 40 தொழிலாளரை கருங்காலித்தனத்திற்கு இட்டு சென்ற தோட்ட இ. தோ:கா. தலைவருக்கு எதிராக தொழிலாளர்கள் மத்தியில் பலத்த விரோதம் வளர்ந்தது.

தொழிற் சங்கங்களை மாற்றுவதிலோ இன, மத ரீதியாக பிரித்து நடப்பதிலோ முதலாளித்துவத்தினதும் நிர்வாகத்தினதும் சுரண்டலும் முகம் கொடுக்க முடியாது. மாறு இவைகள் தொழிலாளர்களின் ஒற்றுமையை குலைத்து அவர்களை பலவீனப் படுத்தி முதலாளித்துவத்திற்கு அடிபணியவே உதவும்.

தொழிலாளர்கள், காட்டிக் கொடுக்கும் இத் தலைமைகளுக்கு எதிராக தம்முடைய அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பது இன்றியமையாது. தொண்டமானை யூ: என்.பி. அமைச்சரவையிலிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கவும் சமசமாஜ — கம்யூனிஸ்ட், நவ சமசமாஜ கட்சி முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சி"/டன் அமைத்துள்ள மக்கள் முன்னணியை தகர்க்கும் போராட்டத்திற்காகவும் ஒன்றிணைய வேண்டும்: முதலாளித்துவ அரசினது திட்டங்களை தோற்கடிக்கு முகமாக தோட்டங்களையும், வேலைத்தலங்களையும் தொழிலாளர் — விவசாய அரசாங்கத்தை நிறுவும் சோஷலிச போராட்டத்தை ஆயுதப்படுத்த முன் வர வேண்டும். இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடும் புரட்சிக் கட்சியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைந்து தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்திற்கு போராடுவது இன்று அத்தியாவசியமாகும்.

## எதிர்ப்புரட்சி இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்...

★ 2ம் பக்கத் தொடர்ச்சி

இந்திய—இலங்கை முதலாளிகளின் சதிக்கும் எதிராக தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் தமிழ் தேசிய இனத்தையும், ஏழை விவசாயிகளையும் அணி திரட்டுவதற்கான வாய்ப்பு முன்னெருபோதும் இல்லாத விதத்தில் உருவாகியுள்ளது. இந் நிலையில் இத் தலைவர்கள் தமது துரோக அரசியல் மூலம் இராணுவ சர்வாதிகாரத்துக்கு தொழிலாள வர்க்கத்தை அடிமைப்படுத்த டற நிலை ரீதியாக தொழிற்படுகின்றனர்.

இவர்கள் கடந்த ஆண்டினுள் உச்சக் கட்டத்திற்கு எடுத்துச் சென்ற துரோகங்களின் மூலம் தொழிலாள வர்க்கம், தமிழ் தேசிய இனம், ஏழை விவசாயிகளுக்கு எதிரான பிற்போக்கு சக்திகளான யூ:என்.பி—சிறீலங்கா — சிங்கள குட்டி முதலாளித்துவ இனவாத மக்கள் விடுதலை முன்னணி ஆகிய சக்திகளைப் பலப்படுத்தியுள்ளனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தனது அறிக்கையில் இத் துரோகிகளைப் பற்றிக் குறிப்பிட்டதாவது:

''மேலும் வடக்கு — கிழக்கில் இந்தியர்களின் பிரசன்னத்தை அங்கீகரிப்பதன் மூலம் இது ஒடுக்கப்படும் சிங்கள விவசாயிகளின் நியாயமான தேசிய உணர்வுகளை இரக்கமற்ற முறையில் புறக்கணிப்பதோடு, படுபிற்போக்கு மக்கள் விடுதலை முன்னணியினதும் அதன் நம்பிக்கைக்குரிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆலோசகர்களதும் கரங்களைப் பலப்படுத்துகின்றது. இக்கொள்கை குட்டி முதலாளித்துவ வெகு ஜனங்களின் கண்களில் தொழிலாளர் இயக்கத்தை செல்வாக்கு இழக்கச் செய்யவும் சிங்கள இன வெறியின் அடிப்படையிலான பாசிச இயக்கத்தின் பெருக்கத்துக்கும் உதவுகின்றது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தினை இலங்கை முதலாளி வர்க்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்துடனும், அத்தோடு இதே வர்க்கப் போராட்டத்தினை சிங்கள, தமிழ் வெகு ஜனங்களை ஜனநாயக ரீதியில் ஐக்கியத்துடன் இணைப்பதற்குப் பதிலாக சமசமாஜக் கட்சி ஒடுக்கப்படும் சனத்தொகையின் சகல பிரிவினரையும் அந்நியமாக்கச் சாத்தியமான அனைத்தையும் செய்து வருகின்றது'' ('இந்திய — இலங்கை ஒப்பந்தமும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்' 'தொழிலாளர் பாதை' பிரசுரம்)

இந்திய—இலங்கை உடன்படிக்கை, இராணுவ ஆக்கிரமிப்பு, மாகாண சபைகள் முதலான சகல பிற்போக்கு நடவடிக்கைகளுக்கும் உதவியளிப்பதன் மூலம் யூ.என்.பி. அரசாங்கத்துடன் ஒட்டியுறவாடும் சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் மறுபுறத்தில் ஏகாதிபத்திய—முதலாளித்துவ அமைப்பைக் காக்கும் வேலைத்திட்டத்துக்கு தொழிலாள வர்க்கத்தை கட்டிப்போடுவதன் மூலம் பிற்போக்கு சி.ல.சு. கட்சிக்கும் அவ்வாறே வலது சாரி இனவாத இயக்கம் நடாத்திவரும் மக்கள் விடுதலை முன்னணி கிராமப் புறங்களை ஊடுருவதற்கான நிலைமையையும் சிருஷ்டித்துக் கொடுத்துள்ளது.

இத்துரோகத்துக்கு எதிராக சோசலிசப் புரட்சியின் பதாகையின் கீழ் தொழிலாள வர்க்கம், ஏழை விவசாயிகள் தமிழ் தேசிய இனத்தினை ஐக்கியப்படுத்தி அணிதிரட்ட முன் வருமாறு சகல நனவுள்ள தொழிலாளர்களையும் ஏழைகளையும், விடுதலைப் போராளிகளையும் வேண்டுகின்றோம். சோசலிச, ஜனநாயக வேலைத் திட்டங்களுக்காகப் போராடக் கூடிய ஒரே பாதை சோசலிசப் புரட்சி முன் நோக்கின் அடிப்படையில் அணிதிரள்வதே.

சமசமாஜ — கம்யூனிஸ்ட் — இ.தொ.கா. தலைவர்கள் யூ. என்.பி. அரசாங்கத்துடனும் மற்றும் முதலாளித்துவ கட்சிகளுடனும் கொண்டுள்ள உத்தியோகப்பற்றுள்ளதும் உத்தியோகபற்றற்றதுமான கூட்டுக்களை உடைத்து, தொழிலாள வர்க்கத்தின் வர்க்கப் போராட்டங்களை அணிதிரட்டவும், யூ. என்: பி. அரசாங்கத்தை வெளியேற்றி, தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணரவும் செயற்படும்படி கோரும் அரசியல் போராட்டத்தை உக்கிரமாக்கும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. இந்த அரசியல் போராட்டத்தின் இலக்கு, தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணி திரட்டுவதற்கு முட்டுக்கட்டையாக உள்ள தலைவர்களை அம்பலப் படுத்தி புரட்சிக் கட்சியை கட்டி எழுப்புவதே, புரட்சிக் கட்சியை கட்டி எழுப்பும் பொருட்டு உடன் ஈடுபடுவதன் மூலம் மட்டுமே இன்று பெரும் அவசியமாகவுள்ள தமிழ் ஈழ, இலங்கை சோசலிச குடியரசுக்கான முன்நோக்குக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.

● இந்திய—இலங்கை உடன்படிக்கை ஒழிக! இந்திய—இலங்கை இராணுவம் வடக்கு கிழக்கிலிருந்து வெளியேறு! தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஊர்ஜிதம் செய்! தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கை வைக்காதே!

● யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று! தமிழீழம் இலங்கை ஐக்கிய சோசலிச குடியரசுக்காக போராடு! இந்திய துணைக் கண்டத்தில் சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறு!

## முதலாளித்துவ மக்கள் முன்...

★ 7ம் பக்கத் தொடர்ச்சி

தாமதியாது இணையுமாறு சகல தொழிலாள ஒடுக்கப்படும் மக்களிடம் நாம் வேண்டுகிறோம். அதன் வெளியீடுகளான ''தொழிலாளர் பாதை'' ''கம்கறு மாவத்தை'' பத்திரிகைகளை படிக்குமாறும் நாம் வேண்டுகிறோம்.

அங்கனமே மக்கள் முன்னணியாளருக்கெதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக போராட்டத்தை நடத்தி இளைஞரை தொழிலாள வர்க்க தலைமைத்துவத்தின் கீழ் அமைப்பு ரீதியாக்க போராடும் 'இளம் சோஷலிஸ்ட்டுகள்'' அமைப்பில் இணையுமாறு சகல இளைஞரையும் நாம் கோருகிறோம்.

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 — வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினுல் மஹரகம நாகஹவததை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்